
# சுவடுகள்




சுதந்திரத்தின் 45 வருடங்கள்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE : FRANCE

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோர்வேயில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்பவர்கட்கு

## ஓர் அன்பான வேண்டுகோள்!

**'அக்கினி'**



நோர்வேயில் விழாக்களோ, சமய கலாசார நிகழ்ச்சிகளோ, கூட்டங்களோ, சந்திப்புகளோ எதுவாயினும் இவற்றை ஒழுங்கு செய்பவர்கள் கவனத்திற் கொள்ளவேண்டிய விடயங்கள் இரண்டு:

1. ஒலி அமைப்பு முறை
2. ஒளி அமைப்பு முறை

கடந்த இரண்டு வருடங்களாக நான் கூர்ந்து கவனித்து வரும் விடயம் என்பதனால் இத்தால் அறியத் தருகிறேன்.

பார்வையாளர்கள் கூடியும், பங்காளர்கள் குறைந்தும் மறைந்தும் உள்ள ஒரு சமுதாயமான தமிழ்ச் சமுதாயத்தில் உங்களது பணிகள் அளவிடற்கரியன. ஆயினும் 'செய்வன திருந்தச் செய்' என்பதற்கிணங்க நீங்கள் ஒலி, ஒளி இரண்டையும் மிக முக்கியமாக எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

ஒலி அமைப்பு முறையில் அலறல், இரைச்சல் தவிர்ந்த சீரான ஒலியமைப்பு இன்றியமையாத ஒன்றாகும். அத்துடன் நீங்கள் ஒழுங்கு செய்யும் மண்டபம், மேடை இரண்டிற்கும் ஏற்றவாறு சத்தம் (sound) அமைதல் வேண்டும். உதாரணமாக நாம் எமது ஊர்களில் முற்றவெளிகளிலும், கோயில் திருவிழாக்களிலும் மரங்களில் கட்டித் தொங்கவிடப்பட்ட ஒலிபெருக்கிகளிலும் கேட்குமளவு ஓசை இங்கு அமையவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இங்கு அன்றும், இன்றும், என்றும் நிகழ்ச்சிகளின் மண்டபங்களும், மேடைகளும் கூப்பிடு தூரத்திலேயே உள்ளன.

இதேபோன்று ஒளி அமைப்பு முறையிலும் சீரான முறை கடைப்பிடிக்கப்படல் வேண்டும். அத்துடன் வீடியோ எடுப்பவர்களும் வீடியோவுக்கான நிகழ்ச்சிகள் என்பதை மறந்து, பார்வையாளர்களுக்கான நிகழ்ச்சிகள் என்பதை நினைவு கொள்ளல் வேண்டும்.

எனவே ஒலி, ஒளி அமைப்பு முறைகள் செய்தால் ஒழுங்காகச் சரிவரச் செய்யுங்கள். அல்லது செய்யாமல் விடுங்கள். இவையிரண்டும் இன்றியே சாதாரணமான முறையில் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யுங்கள்.

"செய்யுந் தொழிலே தெய்வம் – அதில்
திறமைதான் நமது செல்வம்"

இதுவே சாலச் சிறந்ததும், முற்றிலும் உண்மையானதும் ஆகும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

– அனந்து –

# இலங்கை மருத்துவ மாணவருக்கு அனுமதி மறுப்பு

## கல்வியை முடித்தவுடன் வெளியேற உத்தரவு



நோர்வேக்கு அகதிகளாக வந்தவர்களாயினும் மாணவர்களாக வந்தவர்களாயினும், இங்கு தொடர்ச்சியாகத் தங்கியிருப்பது தொடர்பாகப் பல பிரச்சனைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இங்கு பல வருடங்கள் தங்கியிருந்து மருத்துவக்கல்வியை முடித்த தமிழ் இளைஞர் ஒருவரை இங்கு தங்கித் தொழில் புரிய நோர்வே அரசு அனுமதி மறுத்துள்ளது.

மயிலுப்பிள்ளை குமரேஸ்வரன் என்ற இந்த இளைஞர் திறமையாகத் தனது கல்வியை முடித்து மருத்துவப் பட்டம் பெற்றுள்ளார். இவர் மருத்துவராகத் தொழில் புரிய வாய்ப்பும் கிடைத்துள்ளது. எட்டு வருடங்களாக பிறெமங்கர் மாநகரசபை தனது பிரதேசத்தில் காலியாக இருந்த பதவி ஒன்றை இவருக்கு வழங்க முன்வந்தது. தற்போது, இந்தப் பகுதியில் வைத்தியர் இல்லாமையால், வைத்தியரின் போக்குவரத்துக்காக வருடமொன்றுக்கு ஏறத்தாழ ஒருகோடி குறோணர்களை பிறேமங்கர் மாநகரசபை செலவிடுகிறது. குமரேஸ்வரன் இந்த நியமனத்தைப் பெறும் பட்சத்தில் அத்தொகையை மாநகரசபை சேமிக்க முடியும்.

நியமனம் வழங்கிய மாநகரசபை குமரேஸ்வரனின் வதிவிட அனுமதியைப் பெறுவதற்காக வெளிநாட்டார் - குடிவரவுத் திணைக்களத்துடன் (UDI) போராடியபிறகு தமக்குச் சாதகமற்ற பதிலையே பெற்றது. குமரேஸ்வரன் தாயகம் திருப்பி அனுப்பப்பட்டால் அங்கு பாதிக்கப் படலாம் என்ற நிலை இருந்தும் அவரைத்

www.tamilarangam.net

தொடர்ந்து தங்க அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

மூன்றாம் உலக நாடுகளில் இருந்து இங்கு வந்து கல்விகற்கும் மாணவர்கள் தமது கல்வியை முடித்ததும் தமது நாடுகளுக்குத் திரும்பவேண்டும் என்ற நோர்வேஜிய அரசின் கொள்கையின் அடிப்படையிலேயே குமரேசனுக்கு வதிவிட அனுமதி மறுக்கப் பட்டுள்ளது. அண்மைக் காலங்களாக மூன்றாம் உலக நாடுகளில் இருந்து மாணவர்கள் இங்கு வருவதற்கான அனுமதி குறைக்கப்பட்டு வருகிறது. குமரேசனின் சகோதரர் ஒருவர் இங்கு வைத்தியராகப் பணிபுரிகிறார் என்பது குறிப்பிடத் தக்கது●

## கைது - விடுதலை

நவம்பரில் இலங்கைக்குத் திரும்பிச் சென்ற மகேந்திரன் கனகரட்ணம்(36)



என்ற தமிழ் இளைஞர் (நோர்வேஜியப் பிரஜை), கடற்படைத் தளபதி கிளன்ஸி பெர்ணாண்டோவின் மரணம் தொடர்பாகக் கொழும்பில் கைதாகிப் பின்னர் நோர்வே அரசின் முயற்சியால் விடுவிக்கப் பட்டமை குறிப்பிடத் தக்கது●

சுவடுகள் பற்றிய உங்களது விமர்சனங்களை எதிர்பார்க்கிறோம். விமர்சனங்கள் மனந்திறந்தவையாக, நாகரிகமான முறையில் இருக்கட்டும். சுவடுகளில் வெளிவரவேண்டியது என நீங்கள் கருதும் விஷயங்களையும் குறிப்பிடுங்கள்.

சுவடுகள் முன்வைக்கும் கருத்துகளை விமர்சனரீதியில் அணுகமுடியாத சிலர் தொடர்ச்சியாகச் சுவடுகள்மீது தமது அழுக்குநிறைந்த மனங்களில் இருந்து அபாண்டமான குற்றச்சாட்டுகளை வாரியிறைக்கிறார்கள். இவர்களது அறிவீனத்தையிட்டு மனம் நோவதையோ அனுதாபப் படுவதையோ தவிர நாங்கள் என்ன செய்யலாம். தாங்களும் ஆக்கபூர்வமாக எதுவும் செய்யாமல், செய்ய நினைப்பவர்கள் மீதும் இவர்கள் காட்டும் அநாகரிக நடவடிக்கைகள், இவர்களது கோழைத் தனத்தினது அடையாளமாகவே தெரிகிறது.

சுவடுகளுக்கு இதுவரை சந்தா செலுத்தாதவர்கள் உடன் சந்தாவைச் செலுத்தி உதவவும். சந்தாவை வங்கிக் கணக்கின் ஊடாக மாத்திரம் செலுத்துங்கள். வங்கிக் கணக்கிலக்கம்: 160752 13062. வங்கியின் பெயர் **Sparebanken NOR.**

சுவடுகளில் வெளியிடத் தரமான படைப்புகள் வாசகர்களிடம் இருந்து வரவேற்கப் படுகின்றன. தவிர்க்க முடியாத காரணங்களால் பிரசுரமாகாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப முடிவதில்லை. உங்கள் நண்பர்களிடமும் வேறு ஆர்வலர்களிடமும் சுவடுகளை அறிமுகம் செய்யுங்கள்.

சுவடுகளுடனான சகல தொடர்புகட்கும்:
**SUVADUGAL, Herslebs Gt 43, 0578 Oslo, Norway.**

www.tamilarangam.net

## சயனைட் மரணங்கள்.......
## திகம்பர சக்கரமும் பேய்பார்த்த கதையும்..........
## மலையகத்தை மறந்த பார்வை............

# நாற்சந்தி

சுவடுகள் ஆசிரியருக்கு,
தங்கள் வெளியீடு இல 41, மார்கழி'92

கனடா ரொறன்ரோவில் இருந்து சிவா கணேசமூர்த்தி என்னும் தமிழ்மகன் எழுதிய கருத்துகளுக்கு என்னில் பட்ட சில உண்மைகளை இங்கு குறிப்பிடுகிறேன்.

தமிழீழ விடுதலைக்காக பல கட்சிகள் ல இயக்கங்கள் தோன்றின. அனைவரும் ஆரம்பத்தில் மிகவும் ஆவேசமாக செயல்பாட்டுடன் தோன்றினர். பின்பு பதவிகள் பணத்திற்காக சொந்த சுயநலத்துடன் செயல்படத் தொடங்கினர். ஆனால் இன்று பல இன்னல்களுக்கு மத்தியில், நாட்டின் மீட்பிற்காகவும், எதிர்கால சந்ததியினருக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்து போராடிக் கொண்டிருக்கும் ஒரே இயக்கம் விடுதலைப் புலிகளே என்று அனைத்து உலகிற்கும் தெரிந்த விடயம். மற்றைய இயக்கங்கள் இந்திய இராணுவத்துடனும் சிறிலங்கா ராணுவத்துடனும் இணைந்து இன்றும் தங்கள் சொந்தத் தமிழ் பேசும் இனத்திற்கு செய்த செய்துகொண்டிருக்கும் துரோகச் செயல்களை உணர்வு உள்ள மக்கள் என்றும் மறக்க மாட்டர்கள்.

வடக்கு கிழக்கு இன்று மண்மீட்பு விடுதலைக்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்து போராடும் பிள்ளைகள் நினைத்த நேரத்தில் சயனைட் குப்பி அருந்தி இறப்பதற்கு முட்டாள்கள் அல்லர். இறுதிவரை போராடி முடியாது என்ற நிலையில் எதிரியின் கையால் சித்திரவதைக்கு உட்படாமல் தவிர்ப்பதற்கே சயனைட் என்னும் கொடிய வில்லைகளை அருந்தி எங்கள் இளம் சமுதாயம் பெறுமதியான உயிரை எங்கள் நாட்டிற்காகத் தியாகம் செய்கிறார்கள். 'இயலாமையால் அல்ல'.

எங்களில் அ-து, வெளிநாட்டில் வாழும் தமிழர்களில் என்னைப் போல் அல்லது பார்வையாளராக இருந்து பிழைபிடிக்கும் பலரைப் போல யார் இந்தத் துணிகரச் செயலைச் செய்வர்.

நாங்கள் துணிவின்மை காரணமாக நாட்டைவிட்டு வெளியேறி அந்நிய நாட்டில் அடிமையாக வாழ்ந்துகொண்டு நாட்டில் பல லட்சம் மக்கள் படும் துன்பங்களைச் சிறிதும் சிந்தியாமல், நாங்கள் பிழைபிடித்து வாயில் வருவது எல்லாவற்றையும் சொல்லி, உணவு இன்றி, உறக்கம் இன்றி, போராடிக் கொண்டிருக்கும் இளம் சமுதாயத்தின் மனங்களையும் ஈழமக்களின் மனத்தையும் புண்படுத்துகிறோம்.

ஈழத்திலிருந்து பாதிக்கப்பட்ட ஒரு தமிழ்மகன் அங்கிருந்து உங்கள் சுவடுகள் மூலமாக கருத்துகளை எழுதியிருந்தால் எங்களைப் போன்றோர் திருப்பிக் கேட்கவே முடியாது. இன்று கிழக்கு மாகாணத்தில் சுற்றிவளைப்பு என்ற போர்வையில் சாதாரண இளைஞர்கள், யுவதிகள் அழைத்துச் செல்லப்பட்டு கடுமையான சித்திரவதைகட்கு உள்ளாக்கப்பட்ட பின்பு எரிகாயங்களுடன் அல்லது நீரில் பிணமாக காணப்படுகின்றனர். இந்நிலையில் தமிழீழ

www.tamilarangam.net

மண்மீட்புப் போரில் ஈடுபடும் இளைஞர்கள் ராணுவத்தின் கையில் அகப்பட்டால் என்ன நடக்கும் என்பதை சற்று விளக்கமாக சிவா கணேசமூர்த்தி என்பவருக்கு எழுத்தாளராகிய நீங்கள் விளக்குவீர்கள் என்று நினைக்கிறேன்.

அனேகர் நாட்டில் என்ன நடக்கிறது என்று தெரியாமலும், பல வருடங்களுக்கு முன் நாட்டைவிட்டு வெளியேறி நாட்டின் விடிவை விரும்பாது பலவிதமாக பல கோணத்தில் எழுதுவார்கள். அவர்களுக்கு தங்களைப் போன்றவர்கள் தக்க பதிலடி கொடுக்க வேண்டும். விடுதலைப் புலிகள் (கொடியதென்று சிலரால் வர்ணிக்கப்படும், ஆம் கொடிய சட்டங்கள் இல்லாவிட்டால் மற்ற இயக்கங்களைப் போல சிங்கள அரசியல்வாதிகளின் காலில்தான் விழுந்திருப்பார்கள்) இன்று ஆயுதத்தைக் கீழே போட்டால் தமிழ் மக்களின் நிலை என்ன? கிழக்கு மாகாணத்தைவிட மோசமான நிலை வடபகுதியில் உருவாகும். பிரேமதாசாவின் உள்திட்டமே புலிகளைத் தன் பக்கம் எடுக்கவேண்டும் அல்லது அழித்துவிட்டு வடபகுதி எங்கும் சிங்களவரைக் குடியமர்த்திவிட்டு கொழும்பில் இருக்கும் துரோகக் குழுக்களையும் அழித்துவிடுவதுதான். கொழும்பில் உள்ளவர்களை அடிக்கடி மிரட்டியும் தனது சார்பாகப் பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டுக்கொண்டு இருக்கிறான்.

ஆகவே ஈழமக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு ஈழப் போராட்டத்தில் வெற்றி அடையவும், ஈழத்தமிழர்களை வெள்ளையர்கள் துப்பாக்கியால் அழிக்குமுன்பு நாங்கள் அனைவரும் ஈழத்திற்குத் திரும்பிச் சென்று சந்தோஷமாக வாழ்வதற்கு தங்களைப் போன்ற சிறந்த நடுநிலை எழுத்தாளர்கள் உதவி புரியுமாறு பணிவுடன் கேட்கிறேன்.

இப்படிக்கு,
யோ.யோசேப்
கின்சார்விக்

சுவடுகள்.

அன்புடையீர்,

இரண்டு விஷயங்கள் பற்றிக் குறிப்பிட வேண்டியுள்ளது. (சுவடுகள் Nov, Dec 1992).

1. திரு கணேசமூர்த்தி விடுதலைப் புலிகள் சயனைட் குடித்து மரிப்பது பற்றி நான் குறிப்பிட்ட விஷயத்திற்குக் கற்பிக்கும் வியாக்கியானங்கள் எனக்கு வியப்பூட்டின. தற்கொலை கோழைத்தனமாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்பதை விளக்கவே அவ்விஷயம் பற்றி எழுதினேன். எது வீரம் என்பது பற்றியோ சயனைட் அருந்தலின் சரிபிழைகள் பற்றியோ நான் அதில் எழுதவில்லை. விடுதலைப் புலிகளின் சயனைட் தற்கொலைகள் அவர்களை வீரர்களாக்குகிறதோ இல்லையோ, ஒன்றுமட்டும் நிச்சயம்; அது கோழைத்தனத்தின் அடையாளமில்லை. விடுதலைப் புலிகளுடன் எனது கருத்து வேறுபாடு, சயனைட் பிரச்சனையைவிட அடிப்படையானது. அவர்களது செயல்முறைகள் அவர்களது அணுகுமுறையிலிருந்து பிறப்பவை. அவர்களது இயக்கம் வலியுறுத்தும் கட்டுக்கோப்பின் ஒரு பகுதிதான் சயனைட் அருந்துதல். வெகுஜன இயக்கம், வெகுஜன அரசியல், மக்கள் யுத்தம் என்றவாறு பிரச்சனைகட்குப் பதில் தேடும்போது ஒரு மக்கள் விடுதலை இயக்கம் எத்தகைய நடைமுறைகளைக் கையாளவேண்டும் என்பது தெளிவாகும். நான் தற்கொலையை என்றுமே ஊக்குவிப்பவனல்ல. ஆயினும் தற்கொலைகளை ஒரேயடியாகக் கோழைத்தனம் என்று கண்டிக்க

www.tamilarangam.net

மாட்டேன். தற்கொலை என்பது ஒரு சமுதாயத்தின்மீது ஒருவரால் வைக்கப்படும் மிகக் கடுமையான விமர்சனமாகவும் அமையலாம். (இதற்கு நிறைய அரசியல் உதாரணங்கள் உள்ளன) தற்கொலைகள் அரசியல் மிரட்டல்களாகவும் அமையலாம். (இதற்கும் நிறைய உதாரணங்கள் உள்ளன.) சயனைட் குப்பி எவ்வாறோ விடுதலைப் புலிகளின் சின்னம் என்ற அந்தஸ்தைப் பெற்றுவிட்டது. எனவே அவர்கள் அதை மறுபரிசீலனை செய்யும் வாய்ப்பு இப்போதைக்கு இல்லை என்பது வருந்தத் தக்கது.

2. International Alert (சர்வதேச எச்சரிப்பு?) எவ்வளவு பொறுப்புணர்வுடன் செயற்பட்டு வருகிறது என்பதற்கு இரண்டு மூன்று வருடங்கள் முன்பு அவர்களது சார்பில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றிப் பிரசுரமான ஒரு ஆவணம் நல்ல உதாரணமோ தெரியாது. எட்வார்டோ மரீனோ என்பவர் தொகுத்த அந்த நூலில் ஜனாதிபதி பிரேமதாஸ மீது புகழாரஞ் சூட்டப் பட்டிருந்தது. அரசு செய்த கொலைகள் குறைவாகக் காட்டப் பட்டிருந்தன. இதுபோன்ற தில்லுமுல்லுகள் பல, அவர்களது அலுவலகத்தில் நடந்த விமர்சனக் கூட்டத்தில் கடுமையாகக் கண்டிக்கப் பட்டன. IA அதுபற்றி எதுவிதமான திருத்தமும் வெளியிட முயலவில்லை. IA எச்சரிப்புத் தாபனம் மட்டும்தானா அல்லது அதற்கு வேறு முனைப்புகளும் உள்ளனவா என்பது கொஞ்சங் கவனமாக ஆராயப்பட வேண்டும்.

நன்றி,
அன்புடன்,
சிவசேகரம்

---

'யுக்திய' ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய 'சரிநிகரு'க்கு வழங்கிய பேட்டியில் (மீள்பிரசுரம்) "உங்களது பத்திரிகை தமிழ் மக்களுக்குச் சார்பாக எழுதுகிறது. தமிழ் மக்களை விமர்சிப்பதில்லை. சிங்கள மக்களைத்தான் விமர்சிக்கிறீர்கள், ஏன்?" எனத் தமது பத்திரிகைபற்றிக் கேள்வி எழுப்பியிருந்தார்கள் எனக் கூறியிருப்பதைப் பார்த்ததும் வந்த ஞாபகம், 'தோட்டக் காட்டினிலே' என்ற சிறுகதைத் தொகுப்பில் மலரன்பனால் எழுதப்பட்ட தார்மீகம் சிறுகதைதான். இனக்கலவரத்தில் மலையக மக்கள் குடியிருக்கும் லயத்தைத் தாக்கச் சிங்களக் காடையர்கள் வருகிறார்கள். அப்பொழுது அதே தோட்டத்தைச் சேர்ந்த பொடி அப்புஹாமி என்னும் சிங்களத் தொழிலாளி அக்காடையர்களைப் பார்த்து, "இந்தாப் பாருங்க, இங்க உள்ளவங்க எல்லாம் நாயாப் பாடுபட்டு கால்வயிறு அரைவயிறு கஞ்சி குடிக்கிறவங்க. ஒருபாவமும் அறியாதவங்க, இவங்கள ஒண்ணும் செய்யவேணாம், பேசாம திரும்பிப் போயிடுங்க." என்கிறான்.

அதற்குக் காடையர்கள் "டேய் நீயும் தமிழன் பக்கம் சேர்ந்திட்டியா, மரியாதையா உன் வேலையைப் பாத்துகிட்டு இங்கிருந்து போயிரு" என்கின்றனர்.

அதற்குப் பொடி அப்புஹாமி "அடே நான் தமிழன் பக்கம் சேரலடா. நியாயம் பக்கம் சேந்திருக்கேன். நீங்க எல்லாம் திரும்பிப் போயிருங்க" என்கிறான். இறுதியில் அவனும் சிங்களக் காடையரின் வன்முறைக்கு இலக்காகிறான்.

.....

தேசிங்குராஜனின் 'தொலைந்துபோன தேசம்பற்றிய குறிப்புகள்' தொடர்பில் சில செய்திகள். வீரகேசரி (24.01.93) வாரவெளியீட்டில் இடம்பெற்ற இரு விடயங்கள் பற்றிய குறிப்பு. இலங்கைப் பொருளாதாரம் தொடர்பாக நேரடி விவாதத்தில் ஈடுபட பிரேமதாசா சிறிமா

www.tamilarangam.net

பண்டாரநாயகாவுக்கு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார். முக்கிய நிபந்தனையாக இனப்பிரச்சனைபற்றிப் பேசக்கூடாது எனக் கூறியுள்ளார். அதன்மேல் "கடந்த நான்கு வருடகாலத்தில் அரசாங்கம் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி விவாதத்தை நடத்துவதற்கு முன்னர், இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக அரசியற் கட்சிகளிடையே பகிரங்க விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும்" எனத் தமிழ்க் கொங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம், பிரேமதாசாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இதைப்பற்றி மாதொருபாகன் (பக்.4இல் இடம்பெற்ற) "பொருளாதார அபிவிருத்திகளைத் தாக்கும் முக்கியமான ஒரு விடயமாக இன்று இனப்பிரச்சனையே உள்ளது. ஆனால் இரு பிரதான சிங்களக் கட்சிகளும் இனப்பிரச்சனையில் கொண்டுள்ள 'கொள்கை அற்ற' கொள்கை இப்பிரச்சனை பற்றி அவர்களால் பொதுமேடைகளில் பேசமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இப்பிரச்சனை பற்றி விவாதிப்பது தம்மைத்தாமே அம்பலமாக்கிக் கொள்வதாகவே முடியும் என இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளும் அஞ்சுவதே இது தொடர்பான விவாதமொன்றுக்கு அவை மறுப்பதற்கான காரணம். உண்மையில் இவ்வாறான ஒரு விவாதம் நடைபெற்றால் எந்தப் பேரினவாதக் கட்சி தமிழர்களுடைய உரிமைகளை ஒடுக்க அதிகளவு பங்களிப்புச் செலுத்தியதோ அது வெற்றி பெற்றதாகக் கருதப்படும். தமிழர்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய விதமாக, பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் யார் ஈடுபட்டது என்ற கேள்வியே அங்கு இருக்காது" என்கிறார். சிந்திக்க வேண்டிய விடயம்.

......

'ஆயிரம் பூக்கள் மலரட்டும்' பகுதி, Issue40, Nov'92இல் இடம்பெற்ற யோகியின் 'ஆயிரம் பூக்கள் மலரட்டும்' பகுதி தொடர்பாக வந்துள்ளது. கலிஸ்டஸ்J.R அவர்கள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு யோகி மன்னிப்புக் கோரவேண்டும், அன்றேல் மானநஷ்ட வழக்கு எனத் தடாலடியாக எழுதியுள்ளார். மயிரிழையில் உயிர்தப்பி ஐரோப்பிய நாட்டிற்கு அரசியல் தஞ்சம் கோரி வந்ததாகக் கூறியுள்ளார். அவரிடம் இன்னும் போராட்ட மூர்க்ககுணம் மிதமிஞ்சியுள்ளது போல் தெரிகிறது. சந்திக்கு வந்த விடயங்கள் சனங்களின் விமர்சனங்களுக்கு ஆளாகும் என்ற சிந்தனையற்று, ஏதோ தனிப்பட்ட பழிவாங்கல்போல் குமுறியுள்ளார். இதைப்பற்றிச் சுவடுகள் கண்டனம் தெரிவித்தலவசியம். இரா.முத்து அவர்கள் சுவடுகளைக் கேள்விக்கு உள்ளாக்கி இருக்கிறார். சுவடுகள் அவசியம் இவ்விடயத்திற்குப் பதில் கூறவேண்டும் என்று நானும்




www.tamilarangam.net

எதிர்பார்க்கிறேன். மேலும் காலம் தாழ்த்தாது 'வேகே'(VG)யில் வந்த சம்பந்தப்பட்ட கட்டுரைகளைத் தமிழாக்கிப் பிரசுரிப்பீர்களாயின், இவ்விடயத்தில் 'திகம்பர சக்கரத்தைப் பேய் பார்த்தது' போன்ற நிலையில் இருக்கும் எமக்கு உதவியாயிருக்கும்.

யா.ம
● இலங்கை.

ஆசிரியர்
சுவடுகள்,
நோர்வே.

அன்புள்ளம் கொண்டவர்களே,
சுவடுகள் பார்த்தேன் படித்தேன். நவம்பர் இதழில் 'மலையக மக்களின் சோக வரலாறு' குறிப்பு கண்டேன்... எங்கோ

தொலைதூரத்தில் இருந்துகொண்டு எங்களைப்பற்றிச் சிந்திக்கிறீர்களே. ஆனால் எங்களோடு வாழ்பவர்கள்கூட எங்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பதுமில்லை. 'சுவடுகள்' குழுவினருக்கு ஒரு முக்கிய விடயத்தைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். அக்டோபர், நவம்பர் சுவடுகள் இதழ்களில் "எண்பதுகளில் ஈழத்துத் தமிழ் இலக்கியம், போக்குகளும் சவால்களும்" என்ற கட்டுரையில் சகோதரி சித்திரலேகா மௌனகுரு அவர்கள் எண்பதுகளில் இலக்கியம் பற்றிய குறிப்புகளில் மலையகத்தை மறந்துவிட்டார். எண்பதுகளில் மலையகம் இலக்கியத் துறையில் எதையும் சாதிக்காது மௌனமாகவா இருந்தது. அங்கிருந்து இலக்கியப் படைப்புகள் முகிழவில்லையா? இங்கு மலையக மக்களைப் பற்றியும், மலையகப் பெண்களின் விடுதலை பற்றியும் எழுதியும் பேசியும் வரும் சகோதரி சித்திரலேகா அலைகடலுக்கு அப்பால் வந்ததும் அவற்றை மறந்துவிடுவது ஏன்?
அது மாத்திரமல்ல, எண்பதுகளில் சகோதர இஸ்லாமிய எழுத்தாளர்களும் எதுவும் படைக்கவில்லையா? ஈழத்து இலக்கிய வரலாற்றில் காலம் காலமாக மலையகம் இருட்டடிப்புச் செய்யப்பட்டே வருகிறது என்பதை இந்தக் கட்டுரை மீண்டும் அந்த உண்மையை எமக்கு உணர்த்துகிறது.
எண்பதுகளில் மலையகத்தில் அபரிமிதமான விழிப்புணர்வு ஏற்பட்டது. மலையக ஆக்க இலக்கிய முன்னோடியும், மலையக எழுச்சிக்கு வித்திட்டவருமான பெருமகன் கோ.நடேசய்யர் அவர்களின் பணியை நாடறியச் செய்ய கருத்தரங்குகள் நடத்தியதுடன் சாரல்நாடன் எழுதிய 'தேசபக்தன் கோ.நடேசய்யர்' நூலை வெளியிட்டது. இளைய தலைமுறை கவிஞனான சு.முரளிதரனின் 'தியாக யந்திரங்கள்', 'கூடைக்குள் தேசம்' ஆகிய படைப்புகள் எண்பதுகளில்தான் வெளிவந்தன. மலையக வெளியீட்டகம் ஒன்பது நூல்களை எண்பதுகளில்தான் வெளியிட்டது. கொழுந்து என்ற சஞ்சிகையையும் வெளியிட்டது.
அது மாத்திரமல்ல... மலையக கலை இலக்கியப் பேரவை எண்பதுகளில் மலையகமெங்கும் கருத்தரங்குகள், எழுத்தாளர் பயிற்சிப் பட்டறை, வீதி நாடகப் பட்டறை, கவிபாட வாரீர் போன்ற நிகழ்வுகளை நடத்தியது. 93ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குள் வெளிவர இருக்கும் "மலையக இலக்கிய வரலாறு" என்ற நூல் பல உண்மைகளை எல்லாம் வெளிச்சத்துக்குக் கொண்டுவர உதவும்.

● அந்தனி ஜீவா
கொழும்பு

www.tamilarangam.net

## ஸ்டாலின் ஹிட்லருக்குக் கொடுத்த 'லஞ்சம்'



அண்மையில் சோவியத் யூனியனில் இருந்து தனிநாடாகிய லித்துவேனியாவைத் தாக்குவதற்கான 'அனுமதி'யை ஹட்லரிடம் இருந்து பெற, ஸ்டாலின் ஒரு பெருந்தொகைப் பணத்தை வழங்கச் சம்மதம் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு அண்மையில் ரஷ்யாவில் வெளியிடப்பட்ட பழைய ஆவணங்களில் ஒன்றில் இருந்து தெரியவந்துள்ளது. இவ்வாறான 'ஒப்பந்தம்', 1941 ஜனவரி 10ஆம் திகதி ஸ்டாலினால் கையொப்பம் இடப்பட்டது. இது நிகழ்ந்து ஆறு மாதங்களுக்குள் ஜேர்மனி, ரஷ்யாவைத் தாக்கியது. இதே ஒப்பந்தம் கைச்சாத்தான காலத்திலேயே ஐரோப்பாவின் புதிய வரைபடம் ஒன்றைத் தமக்கு விருப்பமான முறையில் ஜேர்மனியும் சோவியத் யூனியனும் வரைந்திருந்ததாகவும் அறியப் படுகிறது. இந்த வரைபடம் (ஸ்டாலினின் கையெழுத்துடன்) அண்மையில் ரஷ்யத் தொலைக்காட்சியில் காண்பிக்கப் பட்டது●

– சிவன்

## இஸ்லாம் பற்றிய தொலைக்காட்சி நிகழ்ச்சி

நோர்வேக்கு வரும் வெளிநாட்டவர்களில் கணிசமான தொகையினர் இஸ்லாமியர்கள். இவர்கள் பற்றிய அறிவு பொதுவாகக் குறைவாகவே உள்ளது. பல இன முரண்பாடுகள் தோன்றவும் இந்த 'அறிவுக் குறைவு' காரணமாக அமைகிறது.

இஸ்லாம் பற்றி விரிவான அறிவு ஏற்படுத்தப்படாது விட்டாலும் ஓரளவேனும் தெளிவான அறிவைக் கொண்டிருப்பது, பலருக்குத் தேவையான ஒன்று. தற்போதைய சூழலில் இஸ்லாம் பற்றிய அறிவைத் திரட்டித்தர போதிய படைப்புகள் இல்லாத நிலையை மாற்ற நோர்வே தேசியத் தொலைக்காட்சியின் (NRK) கல்விப்பிரிவு தயாரித்துள்ள தொடர்நிகழ்ச்சியும், நூலொன்றும் உதவக்கூடும்.

இந்த நூல், நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு 22459416 என்ற தொலைபேசி இலக்கத்துடன் (Beate Flattum Rud) தொடர்பு கொள்ளலாம்.

– செய்தியாளன் –

www.tamilarangam.net



# ஒரு மாறுதல் – ஒரு ஆறுதல்
## தேவர் மகன்




தமிழ்ப் படங்களைப் பார்க்கிறவர்கள், முற்பிறவியில் பெரிய பாவம் செய்தவர்கள் என்பது ஆன்றோர் வாக்கு. தாங்கள் எதைப் படமாக எடுக்கிறோம் என்ற நினைவே அற்று, எதை எடுத்தாலும் ரசிகர்களின் தலையில் கட்டிக் காசாக்கி விடலாம் என்று நினைத்துத் தமிழ்ப்படம் எடுப்பவர்கள்தான் அதிகம். அதனால்தான் தமிழ்ப் படங்கள் வேற்றுமொழிக் கலைஞர்களாலோ, ரசிகர்களாலோ மதிக்கப் படுவதில்லை. எப்போதாவது சில படங்கள் இந்த வரைமுறைகளை மீறி வெளிவர முயன்றிருக்கின்றன. அவ்வகையில் வந்த ஒரு படம் 'தேவர்மகன்'.

'வன்முறை வேண்டாம்' என்று வன்முறையால் சொல்லும் படம் தேவர் மகன். அண்மைக் காலங்களாகத் தனது திருப்திக்கேற்ற படங்களை உருவாக்கிவரும் கமலஹாசனின் படங்களில் தேவர்மகன், கடின உழைப்பின் விளைவு. திரைக்கதை அமைப்பில் இருந்து, படத்தொகுப்பு வரை பல தளங்களில் உழைப்பின் பெறுமதியை இந்தப் படத்தைப் பார்த்து உணரமுடிகிறது. ஆனால் கதைத்தெரிவில் பெரிதும் உடன்பாடு காணமுடியவில்லை. வெறும் பழிவாங்கல் கதைதான். அறிவு தெரிந்த நாள்முதல் பார்த்துப் பழகிய கதைதான், குடும்பப் பகை. ஆனால், இதை அழகாகச் சொல்ல முடியும் என்று நிரூபித்திருக்கிறார்கள்.

பல வருடங்கள் முன் பார்த்த தகாரா என்ற மலையாளப் படத்தையும், அண்மையில் பார்த்த ஆவாரம்பூ படத்தையும் (இரண்டும் ஒரே கதைதான்) இயக்கிய பரதன் இந்தப் படத்தையும் இயக்கியுள்ளார். கதை நகர்வில் மிகவும் யதார்த்தத்தை உணர முடிகிறது. பாத்திரங்களை ஒருங்கிணைத்த விதமும், அவற்றிற்கு வழங்கப் பட்டுள்ள இடமும் வழமையான படங்களில் இருந்து வேறுபாட்டைக் காட்டுகின்றன. முக்கிய பாத்திரங்களை அளவுணர்ந்து பாவிக்கும் இயக்குனர்கள் தமிழில் மிகக் குறைவு. பரதனின் பாத்திரங்கள் யாவும், அவசியப்பட்ட அளவிலேயே படத்தில் வருகின்றன. முக்கியமாக கௌதமி, ரேவதி போன்ற நடிகைகள் இருந்தும் அவர்கள் மிக அவசியப்பட்ட காட்சிகளிலேயே வருகின்றனர்.

படத்தில் மிகவும் கவர்வது நடிப்புத்தான். அளவுக்கு மிஞ்சிய அல்லது குறைந்த நடிப்பையே தமிழ்ப் படங்களில் காணமுடியும். இந்தப் படத்தில் சிவாஜியின் வழமையான பாணியில் இருந்து வேறுபட்ட நடிப்பு உட்பட எல்லா நடிகர்களிடமும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயல்பான நடிப்பைக் காணமுடிகிறது.

காட்சி அமைப்புகளிலும், ஒளிப்பதிவிலும் மிக அழகைக் காணமுடிகிறது. அவசியமான அளவு ஒளியில் படம்பிடிப்பது அண்மைக் காலங்களாக குறைந்து வருகிறது. பதிலாக செயற்கை ஒளியையே படங்களில் பாவிக்கும் போக்குப் பெருகி வருகிறது. இந்தச் சூழலில் இயற்கை ஒளியைப் பாவித்து ஒழுங்கான ஒளிப்பதிவை எப்போது பார்க்க முடிகிறது?

இந்தப் படத்தில் ஸ்ரீராமின் ஒளிப்பதிவை மீண்டும் அழகாகத் தரிசிக்க முடிகிறது.

பாடல்கள் தனது போக்கில் இருப்பது போலல்லாமல், படத்துடன் இணைந்திருப்பது இந்தப் படத்தின் சிறப்பம்சம். ஆனால் ஒரு சண்டையும் அதனையொட்டிய பாட்டும் கொஞ்சம் கண்ணை உறுத்தின. இவற்றைப் பாராததுபோல் விட்டுவிடலாம். ஏனைய நல்ல அம்சங்களைக் கருத்திற் கொண்டு, இந்தப் படத்தைப் பார்க்கலாம்.

தமிழில் சில நல்ல படங்கள்தான் வந்திருக்கின்றன. தேவர்மகன் சில குறைகளோடு அந்த வரிசையில் சேர்த்து எண்ணப்படக் கூடியது.

**மஹிந்தன்**

அடுத்த இதழ்...



தமயந்தி எழுதும்.

# ஊர் ஒன்று..

புதிய தொடர் ஆரம்பம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆயிரம் பூக்கள் மலரட்டும்

## ஐரோப்பாவிலும் துரோகிகள் உண்டா?

சுவடுகளுக்கு,

அண்மையில் தங்கள் பத்திரிகையில் ஆயிரம் பூக்கள் பகுதியில் பலவகைப்பட்ட விவாதங்களும் இடம்பெறுகின்றன. சிலவற்றில் எமது சமூகத்தில் உள்ள உள்நாற்றங்கள், காட்டிக் கொடுப்புகள் பற்றி வாதங்களும் எதிர்வாதங்களும் இடம்பெறுகின்றன. இதில் ஒருவர் புலியையும், எமது சமூகத்தையும் காட்டிக் கொடுத்ததாக அல்லது அதுபற்றித் தகவல் வெளிவந்ததனால் எமது சமூக்திற்கு அவப்பெயர் ஏற்பட்டதாக எழுதியிருக்கிறார். இப்படியான பல சம்பவங்கள் பல நாடுகளிலும் சிலரின் அறியாமையாலும், பழிவாங்க வேண்டும் என்ற உணர்வினாலும், சுயநலத்தினாலும் ஏற்படுகிறது.

இந்த வகையில் புலிகளை விமர்சிப்பவர்களும், புலிகளால் பாதிக்கப்பட்ட சிலரும் ஈடுபடுவது கவலை தருவதாகும். அதேநேரத்தில் புலிகள் சிலரும் இவ்வாறான வேலைகளில் ஈடுபடுவதைக் கட்டுரையாளர்கள் யாரும் சுட்டிக் காட்டாமல் விட்டது ஏன்? உதாரணமாக, இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்ட போது, எல்லோரும் புலிகள் மீதே சந்தேகப் பட்டார்கள். தமிழகத்தில், இந்தியாவில் ஏன் உலகத்தில் உள்ள எல்லாப் பத்திரிகைகளுமே அவ்வாறுதான் எழுதின. அவ்வாறு நம்புவதற்கான ஆதாரங்களையும் அவை தந்தன. ஆனால், லண்டனில் இருந்து கிட்டு தினமணிக்கு வழங்கிய பேட்டியில் சிவராசன் தமது இயக்கத்தில் இல்லை என்று கூறியது மட்டுமன்றி, சிவராசன் புதிய ஜனநாயகம் போன்ற பத்திரிகைகளின் ஆளாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறினார். இது மாத்திரம் காட்டிக் கொடுப்பில்லையா? இத்தனைக்கும், இந்தியப் படைகள் புலிகளுடன் மோதும்போதும், இந்தியாவால் புலிகள் தடைசெய்யப் பட்டபோதும் புலிகளுக்கு ஆதரவாகப் போராட்டங்கள் நடத்துபவர்கள் அவர்கள்தான். தமிழீழ விடுதலைக்கு ஆதரவாகக் கருத்தரங்குகள் போராட்டங்கள் நடத்தித் தினசரி பொலிசாருடன் இழுபறிப் படுபவர்கள்.

புலிகள் கொலையில் சம்பந்தம் இல்லை என்று மாத்திரம் கூறியிருக்கலாம், அதை நிரூபித்திருக்கலாம். ஆனால் வேறு ஒருவரை ஏன் குற்றம் சாட்டினார்கள். புதிய ஜனநாயகம் மற்றும் சிறிய பத்திரிகைகள்தான் இந்தியப் படைகள் ஈழத்தில் நடத்திய அநியாயங்களுக்கு எதிர்த்துப் பெரும் போராட்டங்கள் நடத்தியவர்கள். தமிழீழத் தலைவர்களுடன்

www.tamilarangam.net

கைகுலுக்கிய தமிழகத்து ஒட்டுப் பொறுக்கிக் கட்சிகள் இந்தியாவின் படைகள் ஈழத்தில் நடத்திய அக்கிரமங்களைத் தட்டிக் கேட்டால் தமக்கு ஆபத்து வரும் என்று தலைமறைவாகி விட்டன. இந்தபுதிய ஜனநாயகம் போன்ற அமைப்புகளும்தான் நிபந்தனையின்றித் தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமையை வழங்குமாறு போராடி வருகின்றன என்பதும் நினைவுகூரத் தக்கது.


இதுவாவது இரு வருடத்திற்கு முந்திய கதை, இன்று சுவிசில் 'மனிதம்' சஞ்சிகையை விற்பதைத் தடுப்பதற்காகப் புலிகள் பொலிசில் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றியெல்லாம் உங்கள் கட்டுரையாளர் எழுதவில்லை. ஏன்? (மனிதம் போட்டோஸ்ரட் இணைத்துள்ளேன்)

புலிகள் எது செய்தாலும் சரி, மற்றவர்கள் எது செய்தாலும் பிழை எனச் சிலரும், புலிகள் எது செய்தாலும் பிழை, தாங்கள் எது செய்தாலும் சரி என்று சிலரும் கூறுகிறார்கள். நீதிநேர்மைப்படி விடயங்களைப் பார்ப்பவர்கள் குறைந்து வருகிறார்கள். யார் பிழை விட்டாலும் அது பிழை என நாம் பார்க்கப் பழகினால் அது தமிழர்களுக்கு மேன்மை தரும்.

எங்களது விசயங்களை வெளியாட்களுக்குப் போகாமல் எங்களுக்குள்ளேயே விவாதித்து நல்லது கெட்டது என்று ஒரு முடிவுக்கு வரலாம். இதைப்போய் ஏன் மூன்றாம் சமுகத்திற்குச் சொல்லித் தலையும் விளங்காமல் காலும் விளங்காமல் திரிசங்கு நிலையை உருவாக்கும் இல்லையா? மற்றது எதிர்விளைவுகளையும் கொண்டுவரும் இல்லையா? எனவே எதுவானாலும் எந்தப் பிரச்சனையானாலும் அது தமிழர் பற்றிய பிரச்சனை தமிழர் மத்தியிலேயே இருக்க வேண்டும். அது மற்றவர்களுக்குப் போவது அனாவசியம்●

சி.ஆனந்தன்,
சூரிச்,
சுவிற்சர்லாந்து

## நோர்டிக் லொத்தோ!



தற்போது நோர்வேயில் நடைமுறையில் உள்ள வாராந்த லொத்தோ போலப் புதிய லொத்தோ நடைமுறைக்கு வர உள்ளது. புதியது என்பதற்குக் காரணம், இது புதன்கிழமைகளில் குலுக்கப் படுவது மட்டுமன்றி, ஐந்து நாடுகளுக்குப் பொதுவான லொத்தோ என்பதுதான்.

வீகிங் லொத்தோ என அழைக்கப்படும் இந்த லொத்தோவில் நோர்வேயுடன் சுவீடன், டென்மார்க், ஃபின்லாந்து, ஐஸ்லாந்து ஆகிய நாடுகளின் சூதாட்ட நிறுவனங்கள் இணைகின்றன. தற்போது நோர்வேயில் 34இலக்கங்களில், ஏழு முதல் இலக்கங்களும், இரு மேலதிக இலக்கங்களும் தெரிவு செய்யப் படுகிறது. புதிய லொத்தோவில் 48இலக்கங்களுக்குள் ஆறு முதன்மை இலக்கங்களும், மூன்று மேலதிக இலக்கங்களும் குலுக்கப்படும். இந்த லொத்தோ மார்ச் மாத நடுப்பகுதியில் விற்பனைக்கு வரலாம்.

– வண்டு –

www.tamilarangam.net



'தமிழர் வழக்கு'

# டென்மார்க் பிரதமரின் பதவியைப் பலியெடுத்த வழக்கு

சிவநந்தன்

சில வேளைகளில் அரசியல் ரீதியாக எழுகிற சர்ச்சைகள் அரசாங்கத்தில் பதவிவகிக்கும் சிலரின் பதவிகளைப் பறிப்பதுண்டு. சட்டத்துக்கு முரணான விதத்தில் நடந்துகொள்வதால் இவ்வாறு பதவியை இழப்போர் பற்றி வரலாற்றில் ஏராளமான உதாரணங்களைப் பார்க்கலாம். இவ்வாறு பதவியைப் பறிகொடுத்தவர்களின் கடைசி உதாரணமாக டென்மார்க் பிரதமர் போல் ஷ்லூத்தரைக் கூறலாம். இவ்வாறு அவர் தனது பதவியைப் பறிகொடுக்கக் காரணம், 'தமிழர்கள்'தான்.

தமிழர்கள் நேரடியாக ஷ்லூத்தருடன் எந்தவிதப் பிரச்சனையும் கொண்டவர்களில்லை. ஆனால், ஷ்லூத்தரின் அரசில் நிகழ்ந்த தமிழர் தொடர்பான தீர்மானங்களில் ஒன்றுதான் இன்று அவரது பதவியைப் பறித்தது.

1988 - 89காலப் பகுதியில், அகதிகளாக டென்மார்க் வந்த தமிழர்களது குடும்ப மீளிணைவு தொடர்பான விண்ணப்பங்களைக் கையாளாமல் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு, அப்போதைய நீதி அமைச்சர் எறிக் நின் ஹன்சன் உத்தரவிட்டிருந்தார். அவரது உத்தரவு முறையற்றது எனக் கூறி எழுப்பப்பட்ட சர்ச்சையால் ஹன்சன் பதவிவிலக நேர்ந்தது.

இவ்வாறு தோன்றிய பிரச்சனை விஸ்வரூபமெடுத்த போது, தனக்கு இதுபற்றி எதுவும் தெரியாது எனப் பிரதமர் ஷ்லூத்தர் கூறியிருந்தார். அவரது கூற்று எவ்வளவு தூரம் உண்மையானது என்பதையும், அவ்வாறு உத்தரவிடப் பட்டது சரியா என்பதையும், அந்த உத்தரவு பாராளுமன்றத்திற்குத் தெரியாமல் எவ்வாறு எடுக்கப் பட்டது என்பது பற்றியும் ஆராய ஒரு விசாரணைக்குழு நியமனம் செய்யப்

www.tamilarangam.net

பட்டது. இந்த விசாரணைக்குழு தனது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு, 6,000 பக்கங்களில் அறிக்கை ஒன்றைத் தயாரித்தது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் ஷ்லூத்தர் தனது பதவியில் இருந்து விலக நேர்ந்துள்ளது. அறிக்கைப்படி ஆரம்பத்தில் ஷ்லூத்தர் இந்தப் பிரச்சனைகள் பற்றிப் பெரிதாக அறிந்திராவிட்டாலும், பின்பு தனக்குத் தெரிந்த தகவல்கள் சிலவற்றைப் பாராளுமன்றத்திற்குக் கூறாமல் மறைத்தார் என நம்ப இடமுண்டு எனக் கூறப்படுகிறது.

தனக்குத் தெரிந்த யாவற்றையும் பாராளுமன்றத்திற்குக் கூறிவிட்டதாக ஷ்லூத்தர் பதவிவிலக முன்பும் பத்திரிகையாளர்களிடம் கூறினார். ஆனால் 1989 ஜனவரியில் நின் ஹன்சன், நீதியமைச்சர் பதவியிலிருந்து விலகியபின், இந்தப் பிரச்சனை தொடர்பாக ஷ்லூத்தர் அதிகம் அறிந்திருந்தார் என அறிக்கை கூறுகிறது. 15மாதங்களாகத் தமிழர்களது குடும்ப மீளிணைவு விண்ணப்பங்கள் கையாளப் படாமல் இருந்ததற்கு யார் உண்மையில் காரணமாக இருந்திருந்தாலும், அதற்குத் தாமும் பொறுப்பு என்ற ரீதியிலேயே ஷ்லூத்தர் பதவியைத் துறந்தார்.

ஷ்லூத்தரின் பதவிவிலகல் டென்மார்க்கில் இவ்வாறு 'பதவி பறிக்கப்பட்ட' முக்கிய நிகழ்ச்சி எனலாம். ஷ்லூத்தர் பத்து வருடங்கள் பதவி வகித்து இப்போது இவ்வாறான ஒரு பிரச்சனையில் பதவியைத் துறந்துள்ளார். இவ்வாறு எமது நாடுகளில் நிகழ்ந்தால் என்ன நிகழும் என்பது சொல்லத் தேவையில்லை. மூடிமறைப்புகள், கண்துடைப்பு விசாரணைகள் என்று தொடர்ந்து, கடைசியில் பிரதமர் உத்தமர் என்றே முடித்துவிடுவார்கள். நல்லவேளையாக இது நிகழ்ந்தது டென்மார்க்கில். நீதியும், நியாயமும் தப்பிப் பிழைத்து வாழ்கிற நாடுகளில் டென்மார்க்கும் ஒன்று என்று சொல்லத் தோன்றுகிறது.●



www.tamilarangam.net

தேசிங்குராஜன்

# தொலைந்துபோன தேசம் பற்றி...

## சில குறிப்புகள்

தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் பல சுயாதீன அமைப்புகள் முயற்சித்து வருகையில், வடக்கிலும் கிழக்கிலும் ராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் தீவிரப்படுத்தி வருகிறது. விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை உதாசீனப்படுத்தியுள்ள அரசு, புலிவேட்டை என்ற பெயரில் தமிழின அழிப்பையே தொடர்ந்தும் நடத்தி வருகிறது. கடந்த வருட இறுதியில் பலகோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களையும், உயரதிகாரிகளையும் நூற்றுக் கணக்கான படையினரையும் குறுகிய காலத்தில் இழந்திருந்த இலங்கை ராணுவம் பல புதிய நவீனரக ஆயுதங்களுடன் மீண்டும் போரை முடுக்கிவிட்டுள்ளது. ஆர்ஜென்டீனாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட புதியரக யுத்த விமானங்கள் சோர்ந்துபோயிருந்த ராணுவத்தினருக்கு சற்று உற்சாகத்தை வழங்கியுள்ளதாக ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு என்பதைவிட, அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் ஜனாதிபதி பிரேமதாசா இவ்வருட இறுதிக்குள் தேர்தலை நடத்தக்கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது. எதிர்க் கட்சிகள் மத்தியில் நிலவும் ஒற்றுமையின்மை, உட்கட்சிப் போராட்டம் என்பன பிரேமதாசாவின் வெற்றிக்குச் சாதகமாக இருப்பினும், நாட்டில் தொடரும் அரசியற் படுகொலைகள், பொருளாதாரச் சீர்கேடுகள் உட்படப் பல காரணிகளும் பிரேமதாசாவின் வெற்றிக்குத் தடைகளாக அமையலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.



www.tamilarangam.net

எனினும், இவ்வருட நடுப்பகுதியில் நிகழவுள்ள மாகாணசபைத் தேர்தலின் முடிவைப் பார்த்தே, இடைக்கால ஜனாதிபதி தேர்தல் பற்றிய தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரியவருகிறது.

அண்மையில் சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதி எறிக் ஸ்ரீபன் வெளியிட்டுள்ள கருத்துகள் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. இவர் தனது உரையில், உலகில் அதிகளவு மனித உரிமைகள் மீறப்படும் நாடாக இலங்கை திகழ்வதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும், இலங்கை அரசின் விஷேட அதிரடிப் படையினரும், ராணுவத்தினரும் மற்றும் முஸ்லிம் ஊர்காவற் படையினரும் பொதுமக்களைத் துன்புறுத்தியும் படுகொலை செய்தும் வருகின்றனர். புலிகளைப் பொறுத்தவரை வடக்கில் (துணுக்காய்) பல மறைமுகச் சிறைச்சாலைகளை உருவாக்கி சந்தேகத்திற்கு இடமானவர்களைச் சித்திரவதை செய்து வருகின்றனர் எனக் குறிப்பிட்ட அவர் இச்சம்பவங்களைச் சர்வதேச மன்னிப்புச் சபை பாரதூரமாகக் கருதுவதாகவும் குறிப்பிட்டார்.

மன்னிப்புச் சபையின் கண்டனம் வெளியான குறுகிய சில நாட்களுக்குள் விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலாளரும் விடுதலைப் புலிகளின் முக்கிய அங்கத்தவருமான 'கிட்டு' இந்திய அரசின் சதிக்குப் பலியாகியதாக அறிவித்தனர். கிட்டுவின் இழப்பு புலிகளைப் பொறுத்தவரை பேரிழப்பாகும்.

கிட்டுவின் மரணம் தொடர்பாக பல முரண்பாடான தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்திய அரசும் சரி, விடுதலைப் புலிகளும் சரி முன்னர் வெளியிட்ட செய்திக்கும் பின்பு வெளியிட்ட செய்திக்கும் பெரும் முரண்பாடு காணப்படுகிறது.

* வடபகுதி மக்களைப் பட்டினிச் சாவில் இருந்து மீட்குமாறும் பொருளாதாரத் தடையை நீக்குமாறும், யாழ் வெகுஜன அமைப்பு ஒன்றியம் ஜனாதிபதிக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

* கடந்த ஏழு மாதங்களில் வடமாகாணத்தில், 905 குழந்தைகள் மூளைக்காய்ச்சலால் மரணம் அடைந்துள்ளனர். சுமார் 14400 குழந்தைகள் இந்நோயின் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்

* இலங்கையர் என்ற உணர்வு சிங்கள மக்களுக்கு ஏற்பட வேண்டும் - முன்னாள் யாழ் அரச அதிபர் லயனல் பெர்ணாண்டோ

* யுத்தத்தை நிறுத்திப் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைக்குத் தீர்வு காணுமாறு வடக்கு கிழக்கு ஆசிரியர்கள் கூட்டாக மகஜர்

* இணைப்பில்லாத எந்தத் தீர்வையும் கூட்டணி ஏற்காது - நீலன்

* சங்குப்பிட்டி - பூநகரி பாதை திறப்பது குறித்து ஐ.நா.அதிகாரிகளுடன் அரசு அதிகாரிகள் பேச்சு

* குடாநாட்டுத் தாக்குதலைத் தீவிரப்படுத்த, கூட்டுப்படைத் தலைமையகம் அநுராதபுரத்திற்கு மாற்றம்

* ஆர்ஜென்டீனாவில் இருந்து இறக்குமதியான நவீன போர்விமானங்கள் விரைவில் குடாநாட்டுத் தாக்குதலுக்குப் பயன்படும்

* விரைவில் மாகாணசபைத் தேர்தல் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவரப் படவுள்ளது. இதன்படி குறித்த மாவட்டத்திற்கு வெளியே இடம்பெயர்ந்து, பிறிதொரு மாவட்டத்தில் வசிக்கும் ஒருவர் தனது இருப்பிடத்தில் இருந்தபடியே தனது சொந்த மாகாணத் தேர்தலில் வாக்களிக்கலாம்

www.tamilarangam.net

விடுதலைப் புலிகளின் பேச்சாளர் திலகர் கொழும்பு ரொய்ட்டருக்கு வழங்கிய செய்தி, பின்பு விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ செய்திக்கு மாறுபட்டதாக இருந்தது. சர்வதேசக் கடற்பிராந்தியத்தில் வைத்தே கப்பலை வழிமறித்ததாக புலிகளும், இந்திய எல்லைக்குள்ளேயே மறித்ததாக இந்தியாவும் கூறுகின்றன.

இலங்கைத் தமிழர் பிரச்சனையில் இந்திய நிலைப்பாடு, புலிகளுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான கடந்தகால



இழுபறி, ராஜீவ் கொலையில் புலிகள் மீதான இந்தியாவின் குற்றச்சாட்டும் சந்தேகமும் என்பவற்றைக் கருத்திற் கொள்ளும்போது இந்திய நிலைப்பாடு ஆகியவற்றை நோக்கும்போது இந்திய நிலைப்பாட்டில் சந்தேகம் ஏற்படுவது இயல்பே. எனினும் இவ்விடயத்தில் புலிகளின் செய்திகளும் முரண்பட்டே காணப்படுகின்றன.

இதேவேளை இனப்பிரச்சனைக்கு சமாதானத் தீர்வைக் காணும் நோக்குடன் அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த மேற்றிராணியார் கென்னத் பெர்ணாண்டோ தலைமையிலான குழு யாழ் சென்று விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறிப்பிடத்தக்க பலன் எதையும் தரவில்லை என அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. சமாதானப் பேச்சுகளைத் தொடரவேண்டும் எனப் புலிகள் ஆவலாயுள்ளதாக கூறியுள்ள இக்குழுவினர் அதற்கு ஆதாரமாக புலிகளால் இரு பொலிசார் விடுவிக்கப்பட்டதையும் குறிப்பிட்டுள்ளார். எனினும் இவ்விடயத்தில் அரசு தொடர்ந்தும் மௌனம் சாதித்தே வருகிறது.

சமாதானப் பேச்சுகள் குறித்து இழுபறி தொடரும் நிலையில் கிளாலிக் கடற்பாதையில் கடற்படையினர் நடத்திய அடுத்தடுத்த தாக்குதல்களில் பெருமளவு பொதுமக்கள் இறந்துள்ளனர். கடற்படையினரின் இக்கோரக் கொலைகளை நியாயப் படுத்திய பிரதமர் விஜேதுங்க, கிளாலி கடலேரி தடைசெய்யப்பட்ட பிரதேசம் எனவும், அங்கு போக்குவரத்து தடைசெய்யப் பட்டுள்ளது எனவும் மீறுவோர் சுடப்படுவர் எனவும் கூறியுள்ளார். கிளாலி கடற்பாதைக்குப் பதிலாக பூநகரிப் பாதையைத் திறக்கத் தயார் எனவும், அதற்காக பூநகரி ராணுவமுகாமை அகற்ற முடியாது எனவும் அரசு கூறியுள்ளது. இதேவேளை திருமலை - மூதூர்ப் பகுதியில் கடற்பயண விபத்தில் ஆறு ராணுவத்தினர் உட்பட அறுபதுபேர் இறந்துள்ளனர்.

நிகழும் யுத்தத்தில் அதிகளவு பாதிப்பைக் கிழக்கு மாகாண மக்களே சந்தித்து வருகின்றனர். கிழக்கிலங்கையில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் சிங்களப் பேரினவாதத்தாலும் தமிழ்ப்

www.tamilarangam.net

பேரினவாதத்தாலும் மாறிமாறித் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றனர். அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் தமிழ்மொழி பேசும் மக்களின் பிரதேசங்கள் பல சிங்களக் குடியேற்றத்தால், தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்கள் சிங்கள பௌத்தமயப் படுத்தப் பட்டுள்ளன. திருமலையில் ஏழு இந்து ஆலயங்கள் தரைமட்டம் ஆக்கப் பட்டுள்ளன. கோயில்களுக்குரிய மற்றும் தமிழர்களிற்கு என வழங்கப்பட்ட காணிகளில் பெருமளவு சிங்கள மக்கள் குடியமர்த்தப் படுகின்றனர்.

கொழும்பில் தமிழ் சிங்கள முஸ்லிம் அரசியற் கட்சிகளின் தலைவர்கள் (பிரேமதாசா, டக்ளஸ், அஷ்ரப்) ஒரே மேடையில் 'தோழமை' கொண்டாடுகின்றனர்.

நாடு முழுவதும் அமைதியின் பெயராலும் விடுதலையின் பெயராலும் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

## துட்டகைமுனு முறை – காமினி பொன்சேகாவின் ஆலோசனை

இனப்பிரச்சனைக்கு, ஆளாளுக்கு ஆலோசனை கூறிக்கொண்டிருக்கும் அதேவேளை பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகாவும் ஒரு ஆலோசனை கூறியுள்ளார். தனது சொந்தத் தொகுதியான மாத்தறை மாவட்டத்தில் 65வது ஆடைத் தொழிற்சாலையைத் திறந்துவைக்க வந்த பிரேமதாசா முன்னிலையில் உரையாற்றுகையில் தனது துட்டகைமுனு திட்டம்பற்றிப் பிரஸ்தாபித்துள்ளார்.

'எல்லாள மன்னனுடன் துட்டகைமுனு இந்நாட்டின் இறைமையைப் பாதுகாக்கப் போரிட்டான். அன்றைய போரில் யுத்த தர்மம் கடைப்பிடிக்கப் பட்டது. தமிழ் மக்கள் பாதுகாக்கப் பட்டனர். தான் போரில் வெற்றி கொள்வதற்காக தமிழ் மக்களைத் துன்புறுத்தவில்லை. அழிவை ஏற்படுத்தவில்லை. தமிழ் மக்களின் கலாசாரமும் மொழியும் வேறானதால் தமிழ்ச் சகோதரர்களை வடபகுதிக்குப் பாதுகாப்பாய் அனுப்பிவைத்தான். இந்த இடத்தில் இருந்துதான் சமஷ்டி ஆரம்பம் ஆகிறது. இதனை எம்மவர் சமஷ்டி எனக் கொள்ள விரும்பவில்லை. சமஷ்டி என்ற சொல்லைக் கேட்டதுமே பயந்துவிடுகின்றனர். பௌத்த குருமார்கூட நடக்காத ஒன்று நடக்கப் போவதாக அதிர்ச்சி அடைகின்றனர்.

இந்நாட்டில் சமஷ்டி முறையை முதன்முதல் கொண்டுவந்தவன் துட்டகைமுனுவே. எனவே சமஷ்டி என்ற வார்த்தைக்குப் பதிலாக, துட்டகைமுனு திட்டம் எனக் கூறினால் பிரச்சனை வராது. சமஷ்டி முறையால் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் இறைமைக்கும் எதுவித ஆபத்தும் வராது. இலங்கையை ஒரே நாடாக ஆட்சி செய்தவர்கள் பராக்கிரமபாகுவும் துட்டகைமுனுவுமே.

'பிரபாகரன் இலங்கைப் பிரஜை'

பிரபாகரன் இந்நாட்டுப் பிரஜை, இதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். இந்திய அரசுடன் இணைந்து அவரை ஏன் பிடித்துக் கொடுக்கக் கூடாது எனச் சிலர் கேள்வி எழுப்புகின்றனர். இப்படியான வெட்கக் கேடான செயலை எமது ஜனாதிபதி ஒருபோதும் செய்யார். இன்னொரு அரசுடன் இணைந்து இந்நாட்டுப் பிரஜையை ஒருபோதும் காட்டிக் கொடுக்க மாட்டார். கெப்பிட்டிப்பொல, வீர புரன் அப்பு

www.tamilarangam.net

போன்றோரை வெளிநாட்டவருக்குக் காட்டிக் கொடுத்தது, எமது நாட்டுக்கு அபகீர்த்தியைத் தேடிக் கொடுத்தது. இப்படியான ஒரு நிலைமை மீண்டும் ஏற்பட எமது ஜனாதிபதி ஒருபோதும் இடம்கொடார்'

தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடும் பாணியில் பிரேமதாசாவுக்கு வக்காலத்து வாங்கும் காமினி பொன்சேகாவுக்கு ஒரு சிறு விளக்கம்: புலி அழிப்பு என்ற போர்வையில் தமிழ் மக்களை வேட்டையாடிவரும் உங்கள் மதிப்பிற்குரிய ஜனாதிபதி, உங்கள் ஆலோசனையைக் கேட்பது ஒருபுறம் இருக்கட்டும். ஆனால் இலங்கைவாழ் மக்களைக் கொல்வதில் குணசேகரா, குணசேகரம் என்ற வித்தியாசம் அவர் காண்பதில்லை. சுமார் ஒருலட்சம் மக்களை மிகக் குறுகிய காலத்தில் கொன்று குவித்தவர் அவர் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

## குமுதமும் 'அர்பைதபிளா(த)'வும்




தமிழகத்தில் இருந்து வெளிவரும் ஜனரஞ்சக வார இதழ் குமுதம். இது அடிக்கடி பல புகழ்பெற்றோரைக் கொண்டு (சினிமா நடிகர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள்) ஒரு இதழைத் தயாரிக்கப் பண்ணி வெளியிடுவது வழக்கம். இந்த வழக்கம் பின்பு வேறு பத்திரிகைகளுக்கும் தொற்றினாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

அது – தமிழ்நாட்டில். தற்போது நோர்வேயின் முக்கிய தினசரி 'அர்பைத பிளா(த)' அண்மைக் காலங்களாக வெவ்வேறு முக்கிய நபர்களை ஆசிரியராகக் கொண்டு பத்திரிகை தயாரித்து வெளியிடுகிறது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம், பல முக்கிய அரசியல்வாதிகள் இவ்வாறு தற்காலிக ஆசிரியப் பணி ஏற்றமைதான்.

'அர்பைதபிளா(த)' (ஆளும்) தொழிற்கட்சியின் கருத்துகளைப் பிரதிபலிக்கும் பத்திரிகை. அண்மையில் பிரதான எதிர்க்கட்சியான வலதுசாரிக் கட்சியின் தலைவியை சிறப்பு ஆசிரியராகக் கொண்டு பத்திரிகை வெளிவந்தது. (மாற்றுக் கருத்துகளை மதிக்கும் பண்பை நாங்கள் இவர்களிடம் இருந்தாவது கற்கவேண்டும்)

அதுமட்டுமன்றி, கடந்த வருடம் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற குவாத்தமாலாவைச் சேர்ந்த றிகபேட்டோ மெஞ்சு பரிசைப் பெற்றுக்கொள்ள நோர்வே வந்தபோது, அவரையும் சிறப்பாசிரியராக வைத்து ஒரு தினசரி வெளிவந்தது. புதுமைதான்!

– சோதி

www.tamilarangam.net

# தமிழகத் தபால்



1. தொடர்ந்து வரும் விருது விவகாரம்

ஒவ்வொரு முறையும்சாகித்ய அகாடமி விருது வழங்கப்படும் சமயம், பலமான எதிர்ப்பு கிளம்பி அடங்கும். இம்முறையும் முதலமைச்சர்" என்ற நாவலை எழுதியது குறிப்பிடத் தக்கது.

இங்கு சாகித்ய அகாடமியினர் எப்படிப் பட்டவர்கள் என்பதையும் சுட்டிக் காட்டவேண்டும். பாரதிதாசனாரும், கண்ணதாசனும் கவிதையுலகில் கொடிகட்டிப் பறந்தவர்கள். ஆனால் பாரதிதாசனாருக்கு அவர் இறந்தபிறகு 1969ல் பிசிராந்தையார் என்ற நாடக நூலுக்கும், கண்ணதாசனுக்கு சேரமான் காதலி என்ற நாவலுக்கும் (1980ல்) விருது(?) வழங்கிக் கௌரவித்ததை எப்படிச் சொல்ல! இந்தக் கதி தி.ஜானகிராமனுக்கும் ஏற்பட்டது. மோகமுள், அம்மா வந்தாள் போன்ற இலக்கியத் தரமான நூல்கள் இருக்க, அவரது 'சக்தி வைத்தியம்' என்ற சிறுகதைத் தொகுதிக்கு 1979ல் விருது சான்ஸ் அடித்தது (ஜாக்பாட் போல).

கோவி.மணிசேகரனின் குற்றாலக் குறிஞ்சிக்கு வழங்கப்பட்டிருக்கும் விருது பற்றி ஒரு நண்பர் சொன்னார்......

"கோவி.மணிசேகரனுக்கு இணையாக 200க்கு மேற்பட்ட நூல்களை பெருங்கவிக்கோ வ.மு.சேதுராமன் எழுதியுள்ளார். அடுத்த ஆண்டு விருதுபெறும் தகுதியை அவர் போக்குகளை இனங்காட்டுகிறது. வளங்கொழிக்கும் நாடுகளிலிருந்து, வாழ்க்கைக்காகப் போராடும் மூன்றாம் உலக நாடுகள் வரையிலும் சிறுகதைகளைத் தொகுத்துள்ளனர்.

அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், ஸ்பெயின், இந்தியா, பாகிஸ்தான், பாலஸ்தீனம், தென்னாப்பிரிக்கா, ஈரான், பராகுவே போன்ற நாடுகளின் சிறுகதைகளும் இதில் அடங்கியுள்ளன. ஒவ்வொரு சிறுகதை ஆசிரியர் பற்றியும், கதையின் முதலில் ஒரு 'அவுட் - லைனை'க் கொடுக்கிறார்கள். கதையில் ஈடுபாடு கொள்வதற்கு இதெல்லாம் உதவுகிறது. மொழிபெயர்ப்பு பற்றிக் குறிப்பிட வேண்டும். தெளிந்த நீரோட்டம் போன்ற சரளமான மொழி பெரும்பாலும் கையாளப் பட்டுள்ளது.

மொழிபெயர்ப்பாளர்கள் தங்களின் பொறுப்புணர்ந்து செய்துள்ளனர்.

'மூழ்கும் வார்த்தைகள்' என்று தலைப்பிட்டு கல்குதிரையின் ஆசிரியர் கோணங்கி எழுதியுள்ள முன்னுரை.... அப்பப்பா! புரியவே புரிய மாட்டேங்கிறது.


மொழியை ஏன் இப்படி இம்சைப் படுத்துகிறார் என்பது புரியவில்லை. 'மதினிமார்கள் கதையில்' மொழியின்மீது

தமிழில் அவ்வாறான ஆவேசங்களும், எதிர்ப்புகளும் எழுந்துள்ளன. 1955முதல் வழங்கப்பட்டு வரும் சாகித்ய அகாடமி விருதுகள், எப்போதும் சரியான படைப்புகளுக்கும், படைப்பாளர்களுக்கும் வழங்கப் பட்டது என்று சொல்ல முடியாது. விதிவிலக்காக சில நல்ல படைப்புகளுக்கு வழங்கப் பட்டுள்ளன. அவ்வளவுதான். தமிழில் கோவி.மணிசேகரனுக்கு, அவர் எழுதிய 'குற்றாலக் குறிஞ்சி' நூலுக்காக 1992க்கான விருது வழங்கப் பட்டுள்ளது. இலக்கியத் தகுதிக்கான எந்த சாரமும் இல்லாத இந்த நாவலை தமிழண்ணல், ராஜம் கிருஷ்ணன், வி.ஐ.சுப்பிரமணியம் கொண்ட குழு தேர்ந்தெடுத்துள்ளது. விருதுக்கான நூலைத் தேர்ந்தெடுப்பதில் என்ன அளவுகோலை இவர்கள் கடைப் பிடித்தனர் என்பது தெரியவில்லை. ஒருவேளை குலுக்கல் முறையில் 'குற்றாலக் குறிஞ்சி' தேர்ந்தெடுக்கப் பட்டதோ என்னவோ!

1947ல் இருந்து எழுதும் கோவி.மணிசேகரன் 200க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். கடவாயில் கோட்டம், தென்னங்கீற்று, யாகசாலை, வேங்கைவனம் போன்ற நாவல்களை எழுதியுள்ளார். எம்.ஜி.ஆர். கையால் 'ராஜராஜன் விருது' பெற்ற இவர், அந்த செய்நன்றி மறவாமல் "மாண்புமிகு பெற்றிருப்பதால், அவருக்கே கொடுத்து விடலாம்". போகிற போக்கைப் பார்த்தால் இதுவும் நடக்கலாம்.

## 2. தற்கால உலகச் சிறுகதைகள்


கல்குதிரையின் பத்தாவது இதழ் 'தற்கால உலகச் சிறுகதைகள்' இதழாக வெளிவந்துள்ளது. பெரிய சைஸில் 320பக்கம் உள்ள இந்நூல், உலக இலக்கியங்களைக் கோடுகிழித்துக் காட்டுகிறது; உலக நாடுகளின் சிறுகதைப் ஆளுமை செலுத்திய கோணங்கி, அறிவுஜீவித் தனமாக எழுதாமல் இருப்பது நல்லது. அதுதான் அவரை இலக்கியத்தில் நிலைநிறுத்தும். நூல் தயாரிப்பில் கோணங்கிக்கு இணையாக 'வேர்கள்' ராமலிங்கம் செயலாற்றியது சாதாரண விஷயமல்ல! இலக்கிய ஆர்வலர்கள் அனைவரிடமும் இருக்க வேண்டிய இந்நூலின் விலை ரூ.ஐம்பதுதான்.




சென்னை நூல் கண்காட்சி

ஆர்வலர்களுக்கும் இருந்தது என்று சொல்லலாம். சிறிது காலம் இளைப்பாறிய இவர்கள், மீண்டும் தற்போது தமிழ் இலக்கியப் பங்களிப்பைச் செய்ய முன்வந்துள்ளனர். மதுரையில், சுவடி இலக்கிய இயக்கத்தினர் 04.01.93 அன்று கி.பி.அரவிந்தனின் 'முகம்கொள்' நூலின் அறிமுகக் கூட்டத்தை நடத்தினர். மதுரையில் உள்ள இலக்கியவாதிகள், இடதுசாரிகள், தமிழ்த் தேசியவாதிகள், இலக்கிய ஆர்வலர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து ஒரு விழாவாக இதனை நடத்திக் காட்டிவிட்டனர். காலத்தின் பதிலாக வெளிவந்துள்ள முகம்கொள் நூலை அறிமுகப்படுத்தி பிரபல எழுத்தாளர் பிரபஞ்சன் உரையாற்றினார். முகம்பெற்று வந்துள்ள சுவடி இலக்கிய இயக்கத்தினர், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தமிழின் சிறந்த நூல்களை அறிமுகம் செய்ய முன்வந்துள்ளனர். இதன் தொடக்கமாக கி.பி.அரவிந்தனின், முகம்கொள் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது.

**● அதியமான்**



புத்தகங்களோடும் எழுத்துகளோடும் சகவாசம் வைத்துள்ள அனைவருக்குமே அது ஒரு பெரிய துயரம்தான்! ஜனவரி 7ம் தேதி இரவு எதிர்பாராத விதமாக, சென்னை புத்தகக் கண்காட்சியில் தீ பற்றிக் கொண்டது. யாழ்ப்பாண நூலகத்தில் சுவை அறிந்திருந்த தீயின் நாக்குகள் சுழன்று சுழன்று

3. தேசிய இனத்தின் குரலாக 'இனி'......

ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு 'இனி' என்றொரு மாத இதழை எஸ்.வி.ராஜதுரை கொண்டுவந்தார். என்ன காரணமோ பின்பு அது நின்றுவிட்டது. இப்போது மீண்டும் 'இனி' வெளிவருகிறது. 'விடுதலைக் குயில்கள்' என்னும்

www.tamilarangam.net

www.tamilarangam.net

அமைப்பின் சார்பாக டிசம்பர்'92இல் இருந்து வெளிவரும் 'இனி', நவம்பரில் பிரபாகரன் பிறந்த நாளில் வெளியிடப் பட்டது. தமிழ் தேசிய இனத்தின் குரலாக இனி வெளிவரும் என்றும், தமிழர்கள் எதிர்கொள்ளும் சவால்களும், பிரச்சனைகளும் அலசப்படும் என்றும் விடுதலைக் குயில்களின் அமைப்பாளர் பேராசிரியர் சுப.வீர பாண்டியன் கூறுகிறார். "அனைத்து விதமான ஒடுக்குமுறைகளையும் எதிர்ப்பது, குறிப்பாகச் சொல்ல வேண்டுமெனில், தமிழ்த் தேசத் தன்னுரிமை கோருதலும், பார்ப்பனீய எதிர்ப்பும்" ஆகியவை மையப் புள்ளிகளாகக் கொண்டு இயங்கும் குயில்களின் குரலாக இனி வெளிவரும் என சுப.வீரபாண்டியன் கேள்வி பதில் பகுதியில் கூறுகிறார். தேசியவாதிகள், கல்லூரிகள், பாட்டாளி மக்கள் கட்சியினர் ஆகியோரிடையே செல்வாக்குப் பெற்றுவரும் இந்த இனி இதழ், இனி தனது விற்பனைத் தளத்தை விரிவுபடுத்தினால்தான் எதிர்பார்த்த பலன் கிட்டும்.

4. சாம்பலாகிய எழுத்துகள்

இந்தத் துயரத்தை எப்படி எழுத? ஒருலட்சத்துக்கும் அதகமான நூற்களை ருசிபார்த்தன. மொத்தம் இருந்த 162 கடைகளில் 136 கடைகள் தீயினால் சாம்பலாகின. எஞ்சியிருந்த கடைகள் தீயணைப்பு வண்டியிலிருந்து பீச்சியடிக்கப்பட்ட நீரால் நமத்துப் போயின.

இத்துடன் மூன்றுகோடி ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியான புத்தகங்களுடன் இருந்த வெளியீட்டாளர்களின் கனவுகளும் சாம்பலாகிய எழுத்துகளில் கரைந்து மறைந்தன.

நஷ்ட ஈடாக எதுவும் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையில் தமிழக அரசுக்கு மனுவுக்கு மேல் மனுவாகக் கொடுத்து வருகிறார்கள். மலர்பாதை அமைக்கும் அரசு, மனமுவந்து 'ஏதாவது' கொடுக்குமா என்பது பைலுக்குள் உள்ள எழுத்தாக உள்ளது.

5. மீண்டும் முகம் கொள்கிறார்கள்

திரு ராஜீவ் காந்தியின் மரணத்திற்குப் பிறகு, அரசியல் ஆர்வலர்களுக்கு எந்த அளவிற்கு தமிழ்நாட்டில் நெருக்கடி இருந்ததோ அந்த அளவிற்கு இலக்கிய



## நோபல் பரிசு பின்பும் பரிசு!!

கடந்த வருடம் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற றிகபேட்டா மெஞ்சுவுக்கு நோர்வேஜிய அரசு முப்பதுலட்சம் குறோணர்களை 'மேலதிகப் பரி'சாக வழங்கியுள்ளது. மெஞ்சுவை நோர்வேஜிய வெளிநாட்டமைச்சர் சந்தித்தபோது இப்பரிசு மெஞ்சுவிடம் வழங்கப் பட்டது.

இந்தப் பணத்தில் பெரும்பகுதி, குவாதமாலாவில் இருந்து வெளியேறி மெக்சிக்கோவில் அகதிகளாக உள்ள மக்கள் நாடு திரும்பவும், இன்னொரு பகுதி, விதவைகளின் அமைப்பு ஒன்றிற்கும் வழங்கப் படும். இந்த உதவியை நோர்வேஜிய உதவி நிறுவனங்கள் கொண்டுபோயச் சேர்க்கும். இதைவிட ஏற்கனவே மெஞ்சு தீவிரமாக ஈடுபட்டுள்ள பணிகளிலும் பணம் செலவிடப்படும். - ரவி

www.tamilarangam.net

# செய்திச் பறைகள்

ஜனவரி 1

* ராணுவத் தீர்வைத் தாம் ஆதரியோம் என பிரேமதாசா புத்தாண்டுச் செய்தி
* ராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளிலும் அகதிகளைக் குடியேற்ற முடிவு

ஜனவரி 2

* பிரேமதாசா ஜனாதிபதியாகப் பதவியேற்ற நான்காண்டுப் பூர்த்தி நாடெங்கும் கொண்டாடப் படுகிறது.
* பாதுகாப்புப் படையினரின் பலம் அதிகரிக்கப் படவுள்ளது என அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஜனவரி 4

* கிளாலிப் பாதையில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது ஒன்பதுபேர் பலியாகினார்.
* மாமடுவவில் நிகழ்ந்த மோதலில் இரு ராணுவத்தினர் கொல்லப் பட்டனர்.
* ஹொரகொல்லயில் இருந்து சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கவிருந்த பாதயாத்திரைத் திட்டம், ஆரம்பக் கூட்டத்தில் ஏற்பட்ட குழுமோதலால் கைவிடப்பட்டது.

ஜனவரி 5

* கிளாலி கடலேரியில் இறந்தோர் தொகை 14பேர் என அறிவிப்பு
* இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக நரேஷ்வர்தயாள் நியமனம்

ஜனவரி 8

* பாரிஸிலோ, லண்டனிலோ பேச்சு நடத்தியதாக நவம் எம்.பி. கூறியுள்ளார்.

ஜனவரி 14

* அரசை எதிர்த்து 80000 மக்கள் கலந்துகொண்ட ஆப்பாட்ட ஊர்வலம் கிளிநொச்சியில் நிகழ்ந்தது.

ஜனவரி 15

* விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டுக் கொழும்பு கொண்டுவரப்பட்ட பொலிசார் இருவரும் பத்திரிகையாளருடன் பேச அனுமதி மறுப்பு
* புத்தகயாவில் உள்ள போதிமரத்துக்கு தங்கமுலாம் வேலியும், தங்கக் கலசமும் பிரேமதாசாவால் அன்பளிப்பு
* இந்துசமுத்திரத்தில் கிட்டு பயணம் செய்துகொண்டிருந்த கப்பல் இந்தியாவால் இடைமறிப்பு. (வெவ்வேறு இடங்களில் இருந்து முன்பின் முரணான செய்திகள்)

ஜனவரி 16

* வடகிழக்கு ராணுவ புலிகளின் கடிதத்துடன் வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த சுவிஸ் பிரஜை கைது.

ஜனவரி 19

* கிட்டுவினதும், ஒன்பது புலிகளதும் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து மூன்று தினங்கள் துக்கம் அனுஷ்டிப்பு
* வெலிஓயாவில் 14 படையினர் பலி
* கிட்டுவின் மரணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலம் நடத்த முயன்ற நெடுமாறன் கைது

ஜனவரி 20

* வெலிஓயாப் பகுதியில் புலிகளின் அதிகளவிலான தாக்குதல்களைச் சமாளிக்கத் தம்மிடம் ஆட்பலம் இல்லை எனப் படையதிகாரி கூற்று.
* ஐரோப்பாவின் சமாதானத் திட்டத்துடன் கிட்டு வந்தபோதே கொல்லப் பட்டதாகப் புலிகள் அறிவிப்பு

ஜனவரி 21

* பாடசாலை அபிவிருத்திச் சபைச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு. முறையாகச் சமர்ப்பிக்கப் படவில்லை என எதிர்க்கட்சிகள் ஆட்சேபம்

ஜனவரி 22

* இனப்பிரச்சனையை விரைவில் தீர்க்குமாறு எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் அரசைக் கோரும்

www.tamilarangam.net

புலிகளுடன் பேச்சு நடக்கவில்லை என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு.

* புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்த எட்டுப்பேர் தமிழ்நாட்டுக்குள் ஊடுருவியுள்ளனர் எனத் தமிழகப் பொலிசார் அறிவிப்பு

ஜனவரி 9

* கிளாலி ஊடாகப் பயணம் செய்ய யாரையும் அனுமதிக்க முடியாது – அரசு

ஜனவரி 11

* பல்கலைக்கழக ஆசிரியர்களின் அரசுடனான பேச்சுகள் தோல்வி. போராட்டம் தொடரும் என அறிவிப்பு

* புல்லுமலையில் ஆறு படையினரும், எட்டுப் புலிகளும் பலி என அரசு அறிவிப்பு

ஜனவரி 12

* எதிரணியினருடனான திறந்த விவாதம் தொலைக்காட்சியில் காண்பிக்கப்படும் என பிரேமதாசா அறிவிப்பு

* நேரடி விவாதத்தில் பொருளாதார அபிவிருத்தி மட்டுமன்றி எல்லா விஷயங்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என லலித் கோரியுள்ளார்.

ஜனவரி 13

* சென்னைப் பொலிசாரால் கைதான திருச்சி வாலிபர் தடுப்புக்காவலில் மர்ம மரணம். இவர், புலிகளிடம் பயிற்சி பெற்றுத் திரும்பியதாகக் கூறப்படுகிறது.

* ஹமீது புலிகளுடன் பெல்ஜியத்தில் நடவடிக்கைக்காகவே கூட்டுப்படைத் தலைமையகம் அனுராதபுரத்திற்கு மாற்றப் பட்டது – ரணில்

* எதிர்க்கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய அரசு அமைக்கப்பட வேண்டும் என சிறீனிவாசன் கோரிக்கை

* அளுத்கமவில் புலிகளைச் சார்ந்தவர் என்ற சந்தேகத்தில் ஒரு தமிழ் இளைஞர் கைது

ஜனவரி 18

* தான் பயணம் செய்த கப்பலை வெடிக்கவைத்து, கிட்டு தற்கொலை செய்ததாகப் புலிகள் அறிவிப்பு

* கிட்டு வெடிக்கவைத்து இறந்ததாகச் சொல்லப்படும் கப்பலில் இருந்து, நான்கு சடலங்கள் மீட்கப்பட்டதாக இந்திய அதிகாரி தகவல். இவற்றில் ஒன்று கிட்டுவினுடையது எனவும் அறிவிப்பு



* எருவில் களுதாவளைப் பகுதிகளில் எண்பதுபேர்வரை கைது

* கிட்டுவின் பயணத்திற்குப் பாதுகாப்பு வழங்குவதாக வழங்கிய உறுதியை இந்தியா கைவிட்டது – அன்டன் பாலசிங்கம்.

ஜனவரி 23

* பேசாலை அகதிமுகாம் காவல்நிலைகள்மீது தாக்குதலில் இரு பொலிசார் பலி.

ஜனவரி 25

* ஏழு மாதங்களில் யாழ், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் 905 குழந்தைகள் பலி

* அத்தியாவசியப் பொருட்களுக்கு யாழ்ப்பாணத்தில் பெரும் தட்டுப்பாடு.

* யுத்தத்தை நிறுத்திப் பேச்சுகளை வடகிழக்கு ஆசிரியர்கள் மகஜர்

ஜனவரி 26

* வடக்கு கிழக்கு இணைப்பற்ற தீர்வைக் கூட்டணி ஆதரிக்காது – நீலன் திருச்செல்வம்

ஜனவரி 29

* சங்குப்பிட்டி, பூநகரிப் பாதை திறப்பது பற்றி ஐ.நா.அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்துடன் பேச்சு நடத்துவதாக அரசு அறிவப்பு

* கிட்டுவின் மரணம் தொடர்பான இந்தியாவின் அறிக்கையை எதிர்பார்ப்பதாக பிரிகேடியர் நளின் கூற்று

www.tamilarangam.net

மாத இதழ்
ஸ்தாபிதம்: புரட்டாதி 88

ஆசிரியர்குழு:
துருவபாலகர்

சுவடுகள்

## யமன் குடிகொண்ட கிளாலி

மீண்டும் ஒருதடவை கிளாலியில் தமது உயிரைக் கையில் பிடித்தபடி பயணம்செய்த தமிழ் மக்கள்மீது காடைத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. புத்தம் காக்கும் அரசின் இரத்தம் தோய்ந்த கைகள் தமிழ் மக்களின் குருதியைக் கடலில் கலக்க விட்டிருக்கின்றன.

தமிழ் மக்கள் இலங்கைப் பிரஜைகள் என்று கூறிக்கொண்டே அரசு நடாத்திய இந்த வெறிச்செயல் உலக அரங்கில் எந்தக் கவனத்தையும் கவராமல் மறைந்துபோய்விட்டது. இவ்வாறான சம்பவங்களை உலகின் கவனத்திற்குக் கொண்டுவர எம்மால் ஏன் முடியாமல் இருக்கிறது?

இந்தப் படுகொலைகள் மீண்டும் நிகழாது அரசு உறுதிப்படுத்த வேண்டும். எந்த நிபந்தனையும் இன்றி வடக்கிற்கு ஒழுங்காக உணவு, மருத்துவப் பொருட்கள் செல்லவும் உடனடியாக அரசு அனுமதிக்கவேண்டும், நிபந்தனைகள் விதிக்காமல் மக்களின் போக்குவரத்துக்கான பாதைகளைத் திறந்துவிட வேண்டும். இப்பகுதிக்கு அத்தியாவசியப் பொருட்கள் செல்லாமல் தடுக்க அரசுக்கு எந்த உரிமையும் கிடையாது. அரசை நியாயத்திற்கு நிர்ப்பந்திப்பதில் அனைவரும் தம்மாலான வழிகளில் முயலவேண்டும்.

## சுதந்திரமும் தூக்குக் கயிறும்

இலங்கை சுதந்திரம் அடைந்து 45 வருடங்கள் கழிந்துவிட்டன. சுதந்திரம் என்பது என்ன என்பது இப்போதும் ஒவ்வொரு மக்களது மனதிலும் கேள்வியாக எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. தனிநபராகவும், குழுக்களாகவும், இனங்களாகவும் சுதந்திரம் அற்ற நிலை படிப்படியாக வளர்ந்து வருகிறது. இதைவிட மோசமாக இலங்கையின் சிறுபான்மை இனங்கள் தமது சுதந்திரத்தை இலங்கை என்ற நாட்டுக்குள் மீளப் பெறமுடியாத நிலை ஏற்பட்டு வருகிறது.

இலங்கை ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்றபோது, இலங்கையில் இருந்த இனங்கள் தம்மிடையே தற்போதுள்ளதுபோல் பாரிய பிரச்சனைகளைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் இத்தனைகாலச் சுதந்திரத்தின் பின்னர், சிறுபான்மை இனங்கள் உரிமைக்காகக் குரல் கொடுத்த போதெல்லாம் நசுக்கப்பட்டு இன்று யுத்தசூழலில் நாடு அவஸ்தைப் படுகிறது. இதற்காகத்தானா எமக்குச் சுதந்திரம் கிடைத்தது?

சுதந்திரத்தின் பின் ஏற்பட்ட ஒவ்வொரு அரசும் சிங்கள பௌத்த கருத்தியலையே மையமாகக் கொண்டு வளர்ந்தன. அந்த அடிப்படையில் சிறுபான்மை இனத்தவரைத் தொடர்ந்தும் ஒடுக்கி வந்தன. சிங்கள அரசுடன் வாழமுடியாது என்ற தமிழ் மக்களது இயலாமையின் வெளிப்பாடே இன்று ஆயுதப் போராட்டம் என்ற வடிவத்திற்குக் காரணம் என்ற உண்மையை உணராதவர்கள் போலக்

www.tamilarangam.net

சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு
300 குறோணர்கள்

முகவரி:
Herslebs Gate 43,
0578 Oslo

சுவடுகள் 42,
தை'93

சுவடுகள்

கொழும்பில் அரசியல்வாதிகள் நடத்திக் கொண்டிருக்கும் பம்மாத்துகள் தொடர்கதையாகி நிற்கின்றன. இந்த அரசினாலோ இதற்கு மாற்றீடாக உடனடியாக உருவாகக்கூடிய அரசினாலோ இனப்பிரச்சனைக்கு உறுதியான அரசியல் ரீதியான தீர்வு ஒன்றைக் கூறுவது கடினம். ஏனெனில் அவற்றின் வாழ்வே இனப்பிரச்சனை நீடிப்பில்தான் இருக்கிறது.

நாடு முழுவதும் வன்முறைக் கலாசாரம் வளர்த்துவிடப் பட்டிருக்கிறது. இந்தக் கலாசாரத்தில் இருந்து நாடு உடனடியாக மீட்கப்பட வேண்டும். தமது நலன்களுக்காக மக்களைப் பலியிட்டுக் கொண்டு, மனித உடல்களின்மேல் நின்றுகொண்டு சுதந்திரத்தின் மகிமை பற்றிப் பேசுவோரை அம்பலப் படுத்தும் பணியில் அனைத்து இலங்கை மக்களும் இணையவேண்டும். இல்லையேல் சுதந்திரத்தின் அர்த்தம் வேறுவிதமாகிவிடும்.

## வீடுசுடும் ராசாவுக்கு சமஸ்டி நெருப்புக்கொள்ளி

இனப்பிரச்சனையைத் தீர்க்க முன்வைக்கப்பட்ட யோசனைகளில் அண்மைக்காலமாகப் பலரது கவனத்தை ஈர்த்த ஒரு யோசனை, பாராளுமன்றத் தமிழ் உறுப்பினர் சிறிநிவாசன் முன்வைத்த சமஸ்டி யோசனை. இந்த யோசனையின் முக்கிய அம்சம் வடக்கு கிழக்கைப் பிரிப்பதுதான். இந்த யோசனை அற்புதமானது என, இந்த யோசனையைத் திரைக்குப் பின்னால் சொல்லிக் கொடுத்தவர்களும், எதிர்க்கட்சியினரும் கும்மாளம் போடுகின்றனர்.

நீண்டகாலமாகத் தமிழ்பேசும் மக்களின் உறுதியான கோரிக்கையாக இருந்துவந்த வடக்கு கிழக்கு இணைப்பை மிகச் சுலபமாகத் தட்டிக்கழித்துவிடலாம் என்ற வீடுசுடும் இனவாதக் கட்சிகளின் எண்ணத்திற்கு ஏற்ற வகையில் கொள்ளி எடுத்துக் கொடுத்தவர் சிறினிவாசன். இவரைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்ததே தமிழ் மக்கள்தான் என்று எண்ணத் துக்கம் தோன்றுகிறது.


வடக்கு கிழக்கு இணைந்திருக்கவேண்டும் என்ற எண்ணம் திடீரெனத் தோன்றிய ஒன்றல்ல. அது பாரம்பரியமாக அப்பகுதிகளில் வாழும் மக்களது உணர்வில் ஊறியது. அவ்வாறு இணைப்பு வேண்டுமா வேண்டாமா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அப்பகுதிகளில் வாழும் மக்களுக்குத்தான் உண்டே தவிர, அரசுக்கோ, சிங்கள அரசியற் கட்சிகளுக்கோ, கொழும்புத் தமிழ்க் கட்சிகளுக்கோ இல்லை.

மக்கள் தமக்குத் தேவையானவற்றை எந்த வழியிலாவது போராடிப் பெறுவார்கள். சிறினிவாச நந்திகள் செய்யக்கூடிய பெரிய உதவி, வழிவிட்டு விலகிநிற்பது மாத்திரம்தான்.

'Suvadukal' - Herslebsgate 43, 0578 Oslo 5, Norway

www.tamilarangam.net

- தேவதாஸ் -



## ஒஸ்லோவுக்கு ஐரோப்பாவில் முதலிடம்!

பலத்த பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஐரோப்பாவின் செல்வந்த மாகாணமாக ஒஸ்லோ விளங்குகிறது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு ஒன்றின்படி ஐரோப்பிய சமூகத்தின் 183 மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் ஒஸ்லோவில் வசிக்கும் ஒருவரது தலா தேசிய உற்பத்தி - வருமானம் (மொத்த தேசிய உற்பத்தியை - வருமானத்தை சனத்தொகையால் வகுக்க வருவது) மிகஅதிகமானது. இந்தக் கணிப்பீட்டில் 'நோர்டிக்' நாடுகளின் (ஸ்கன்டினேவியா + ஃபின்லாந்து, ஐஸ்லாந்து) வாழ்க்கைத்தரம் ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் திருப்திகரமானது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஐரோப்பிய சமூக நாடுகளின் 1989ஆம் ஆண்டுக்குரிய (சுட்டெண்100) சராசரி தலா வருமானம் 13551 ECU உடன் (ஐரோப்பிய பொதுப் பண அலகு) ஒப்பிடுகையில், ஒஸ்லோ நபர் ஒருவரின் தலாவருமானம் குறைந்த பட்சம் 25% அதிகமாகும். இவ் ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ள தலாவருமானம் கூடிய, முதல் 12 ஐரோப்பிய மாகாணங்கள் (சுட்டெண்கள் அடைப்புக்குள்):

ஒஸ்லோ/ ஆகர்ஸ்ஹஸ் - நோர்வே(180)
ஹம்பேர்க் - ஜேர்மனி (173)
லண்டன் - பிரிட்டன் (168)
பாரிஸ் - பிரான்ஸ் (162)
ட்றம்ஸ்ராட் - ஜேர்மனி(148)
நிலாண்ட்ஸ்லோன் - ஃபின்லாந்து(145)
பிறெமன் - ஜேர்மனி(141)
லொம்பார்டிக் - இத்தாலி(139)
ஒபர்பெயர்ண் - ஜேர்மனி(137)
ஸ்ரொக்ஹோம் - சுவீடன்(136)
க்றொணிங்ஙன் - நெதர்லாந்து(135)
றோகலாண்ட் - நோர்வே(133)

இவ்வறிக்கையின்படி கொப்பன்ஹேகன் 17வது இடத்தில் உள்ளது(125). நோர்வேயின் துறொம்சோ மாகாணம் (121), புஸ்கறு(ட்) (120), ரெலிமார்க் (119) ஆகியவற்றினது உற்பத்தி வருமானம் குறிப்பிடத் தக்க நிலையில் உள்ளது. எனினும் ஐரோப்பிய சமூகத்தின் ஏழை நாடுகளான அயர்லாந்து, போர்த்துக்கல், ஸ்பெய்ன், இத்தாலியின் தென்பகுதி, கிரேக்கம் போன்றன மிகக் குறைந்த உற்பத்தி வருமானத்தைக் கொண்டுள்ளன. குறிப்பாகப் போர்த்துக்கல்லில் உள்ள சகல மாகாணங்களுமே 75க்கு குறைந்த சுட்டெண்களையே பெற்றுள்ளன. தமது பொருளாதாரத்தைச் சீரமைக்கப் பாரிய நிதி - தொழில்நுட்ப உதவிகளை இந்நாடுகள் ஏனைய ஐரோப்பிய நாடுகளிடம் இருந்து எதிர்பார்த்துள்ளன.

www.tamilarangam.net

ஸண ஸடலண கஜ

# ராமனுக்கு அப்பளாச்சாரியாரின் பகிரங்கக் கடிதம்

ராமா! நீயும் நோர்வே வந்து சேர்ந்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சி. உடன் உன்னுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை, குறைநினையாதே. ராமா, பல்வேறு விடயங்களை உன்னிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். வெகு அண்மைக் காலம்வரை நீ ஈழத்தில் இருந்திருக்கின்றாய். நடைமுறை விடயங்கள் உனக்கு நன்றாகவே தெரியும். என் மனதில் ஏற்படும் சந்தேகங்கள் (சிலசமயம் அவை தவறானவை என்று தோன்றினாலும்கூட) பலவற்றை உன்னிடம் கேட்கலாம் என நினைக்கிறேன்.

இராமா, எமது நாட்டில் யுத்தம் தொடர்ந்தும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பல அப்பாவிப் பொதுமக்களும் போராளிகளும் ராணுவத்தினரும் உயிரிழந்து கொண்டிருக்கின்றனர்.

சிங்களப் பேரினவாத அரசால் தொடர்ந்தும் நாம் ஒடுக்கப்பட்டு வருகின்றோம். அதற்கெதிராகப் போராடும் நாம், எவ்வாறு எமது போராட்டத்தை நடத்துகிறோம்? தமிழ்மொழி பேசும் சிறுபான்மையினரான எமக்குரிய சரியான, பொருத்தமான அரசியற் தீர்வு எதுவாயினும் அதைத் (அது தமிழ் ஈழமாயிருக்கலாம், சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி அல்லது சுயாட்சித் தீர்வாயிருக்கலாம்) தீர்மானிக்கும் உரிமை எமக்கே உண்டு. அவ்வுரிமை சிங்கள மக்களுக்கோ சிங்களப் பேரினவாதிகளுக்கோ இருக்க முடியாது. ஆனால், எமது போராட்டத்தில் நிகழ்ந்துவரும் செயற்பாடுகளால் எம்மத்தியில் சுடர்விட்டுப் பிரகாசித்துவரும் குறுந்தேசியவாதத்திற்கு மத்தியில் எமக்குரிய சரியான அரசியற் தீர்வு எது என்பதைத் தீர்மானிப்பது மிகவும் சிக்கலாகியுள்ளது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் எமது பிரச்சனைக்குத் தீர்வு சாத்தியமா என்றால் சாத்தியம் என்றே நான் கூறுவேன். ஆனால் பல முக்கிய விடயங்களுக்கு இறுதியான தீர்வு கிடைத்தபிறகே 'ஒன்றுபட்ட இலங்கைக்குள்' என்பது சாத்தியமாகும். அதாவது பிரிந்துபோகும்

www.tamilarangam.net

உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை அங்கீகாரம் அவசியம். இலங்கை பல்லின பலமத பன்மொழி மற்றும் பல்வேறுபட்ட சமூக, கலாசாரங்களை கொண்ட அமைப்பு என்பது அரசியல் அமைப்பில் ஏற்றுக் கொள்ளப்படல் அவசியம். எந்த இனமும் வேறொரு இனத்தின்மீது நேரடியாகவோ மறைமுகமாகவோ பலாத்காரத்தையோ, அரசியல் அதிகாரத்தையோ பிரயோகிப்பது தடுக்கப்பட வேண்டும். ஒரு இனத்தின் சுயாதிபத்தியத்தின்மீது ஏனைய இனங்கள் அதிகாரம் செலுத்தாமல் அரசியலமைப்பு உத்தரவாதம் வழங்க வேண்டும். இவை நடைமுறைக்கு வந்தபின்பே 'ஒன்றுபட்ட இலங்கைக்குள்' தீர்வு என்பதுபற்றிச் சிந்திக்க முடியும்.

ஆனால் ஒரு விடயம் புரியவில்லை. வடக்கும் கிழக்கும் இணைந்த தீர்வே சாத்தியம் எனப் பல்வேறுபட்ட பிரிவினரும் வலியுறுத்துகின்றனர். காலம் காலமாக வடக்கு கிழக்கு மக்கள் ஒன்றுபட்ட ரீதியில் செயல்பட்டாலும் கிழக்கு மாகாணத்தின்மீது வடக்கு மாகாண அரசியல்வாதிகளின் செல்வாக்கு இல்லையெனச் சொல்லமுடியாது. குடாநாட்டை மையப்படுத்தியே கிழக்கு மாகாணம் பறறியும் முடிவு எடுக்கப் படுகிறது. தமிழரசுக் கட்சி, பிறகு கூட்டணி செய்த அதே தவறுகளைத்தான், தொடர்ந்து வந்த இயக்கங்களும் செய்யத் தொடங்கின. அரசியல் ராணுவப் பொறுப்பாளர்களை நோக்கினால் இது தெளிவாகும். பெரும்பாலும் உயர்பதவி வகிப்பவர்கள் குடாநாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களே. இவையெல்லாம் காரணங்கள் அல்ல என்று ஒதுக்கினாலும், கிழக்கு மாகாண மக்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளாமல் வடக்கு கிழக்கு இணையவேண்டும் எனக் கூறுவது எந்த வகை நியாயம்? ஏனென்றால் வடக்கும் கிழக்கும் தமிழ்மொழி பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என்பதற்குப் பதிலாகத், தமிழ் மக்களது பாரம்பரியப் பிரதேசம் என்ற அணுகுமுறையிலேயே வடக்கு கிழக்கு இணைந்திருக்க வேண்டும் என்று கூறப்படுவதாக நான் கருதுகிறேன். இன்று யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமெனில் அது தமிழ்மொழி பேசும் மக்களுக்குரிய தீர்வாக அது இருக்க வேண்டுமேயன்றி வெறுமனே தமிழ் மக்களின் பிரச்சனைக்குத் தீர்வாக அமைய முடியாது. தமிழினத்தைப் போன்றே வடக்கு கிழக்கில் வாழும் ஏனைய சிறுபான்மையின மக்களுக்கும் வடக்கு கிழக்கு பாரம்பரியப் பிரதேசமே. இப்பிரதேசங்களில் வாழும் சிறுபான்மையின மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் நாம் முக்கிய கவனம் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் முஸ்லிம் மக்களை குடாநாட்டைவிட்டு விரட்டியடித்தது மட்டுமன்றி கிழக்கு மாகாணத்தைப் பாரம்பரியப் பிரதேசமாகக் கொண்ட முஸ்லிம் மக்கள் பலரைக் கொன்று குவித்து வருகிறோம்.

தமிழ் பேசும் மக்களுக்குரிய அரசியல் தீர்வை சிங்களப் பேரினவாதிகளோ அன்றேல் சிங்கள மக்களோ எவ்வாறு தீர்மானிக்கும் உரிமை அற்றவர்களோ அவ்வாறே கிழக்கு மற்றும் வடக்கு மாகாணத்தில் உள்ள சிறுபான்மையின மக்களுக்கான தீர்வை வெறுமனே வடக்கு கிழக்கு இணைப்பின் மூலம் திணிக்கும் உரிமையும் யாருக்கும் கிடையாது.

www.tamilarangam.net

வடக்கும் கிழக்கும் இணையவேண்டும் எனில், நிச்சயம் கிழக்கு மாகாண மக்களின் அபிப்பிராயம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அதேசமயம் அங்கு வாழும் சிறுபான்மைத் தேசிய இனங்களான மலையக, முஸ்லிம், சிங்கள மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளால் தமிழ் மக்கள் பலவீனப்பட்டுப் போய்விடுவார்கள் என எனது நண்பர் ஒருவர் கூறுகிறார். சில சமயம் அது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் தமிழ் மக்கள் பலவீனப்பட்டுப் போய்விடுவார்கள் என்பதற்காக இன்னொரு இனத்தின் உரிமைகளை நாம் மறுக்க முடியாது. மாறாக எமது பிரதேசத்தில் வாழும் சிறுபான்மையின மக்களிடையே உறவை விருத்தி செய்துகொள்வதன் மூலமே நாம் பலமாகத் திகழ முடியும்.

முடிவாக நான்கூற விரும்புவது இதுதான். வடக்கும் கிழக்கும் இணைப்பிற்கு நான் எதிரானவன் இல்ல. ஆனால் 'குடாநாட்டுச் சிந்தனையை' அடிப்படையாகக் கொண்ட இணைப்பிற்கு நான் எதிரானவன். மாறாக இணைப்பு பற்றி கிழக்கு மாகாண மக்களின் அபிப்பிராயமும், வடக்கு கிழக்கு சிறுபான்மை மக்களின் அபிப்பிராயமும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். வெகு அண்மைக் காலம்வரை தாயகத்தில் இருந்தவன் என்றமட்டில் இது தொடர்பான உனது கருத்தை எதிர்பார்க்கிறேன்.●

இப்படிக்கு - நண்பன்
அப்பளாச்சாரியார்

---

இலங்கை சுதந்திரம் அடைந்து 45 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் சுதந்திரம் என்பது பெயரளவில் மாத்திரமே நடைமுறையில் உள்ளது. அதிகாரத்தைக் கையில் வைத்துள்ள பல தரப்பினரும் மனித உரிமைகளை மீறிக்கொண்டே இருக்கிறார்கள். இவ்வாறு செயற்படுவோரால் தேசமும் மக்களும் சின்னாபின்னப்பட்டுப் போயுள்ளனர்.

இந்த மனித உரிமை மீறல்களில் இலங்கை அரசு, இந்திய அரசு (இந்தியாவில் உள்ள இலங்கையர்மீது), ஜேவிபியினர், விடுதலைப் புலிகள், முஸ்லிம் ஊர்காவற் படையினர், ஈபிஆர்எல்எஃப், மற்றும் கொழும்பு இயக்கங்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்திருக்கின்றன, ஈடுபட்டும் வருகின்றன. மாற்றுக் கருத்து உடையோரைச் சிறையில் அடைத்துச் சித்திரவதை புரியப்படும் கொடுமை இன்னும் தொடர்கிறது. இது தொடர்கதையாகவே உள்ளது.

இந்தத் துயர்நிலை நீங்க உழைப்பது அனைத்து மக்களதும் கடமையாகும். இதில் எவரும் எக்காரணத்தைக் காட்டியும் பின்னிற்கக்கூடாது, முடியாது.

சகல அரசியற் கைதிகளும் எதுவித நிபந்தனையும் இல்லாமல் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், சகல தரப்பு மனித உரிமை மீறல்களும் நிபந்தனையின்றி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் சுவடுகள் அனைத்துத் தரப்பினரையும் வேண்டுகிறது. தாய்நாட்டின் துயர்நீங்கவேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் இந்த வேண்டுகோளை விடுக்க வேண்டும் எனவும் சுவடுகள் வேண்டுகிறது.●



வெளிநாட்டவருக்கு எதிராக, அதிலும் குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமெரிக்க கறுப்பின மக்களுக்கு எதிராக ஐரோப்பா எங்கும் இனவாதம் வளர்ந்து வருகிறது. இந்நிலையில் பிறந்துள்ள புதிய வருடம் நோர்வேயிலும் இனவாதச் செயற்பாடுகளிற் புதிய தற்போதைய இளைஞர் அமைப்புகளின் தலைவர்கள் தங்களது வேறுபட்ட கொள்கைகள் சித்தாந்தங்களுக்கு மத்தியிலும் இனவாதத்தை எதிர்க்க ஒற்றுமைப் பட்டுள்ளமை வரவேற்கப்பட வேண்டியது. அதிலும் ஹாகன் இனவாதத்தைக் கக்க ஆயத்தப் படுத்திக் வேலையற்றோர் பட்டியலில் உள்ளமை தெரியவந்துள்ளது. இந்த மக்களின் எதிர்காலம் என்னவென்றே தெரியாத நிலையில் இனவாதம், நிறவாதத்தையும் எதிர்க்கவேண்டிய நிலையில் இவர்கள் உள்ளனர்.

எம்மில் எத்தனைபேர் இவற்றை

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வடிவங்களைத் தோற்றுவிக்கும் என எதிர்வு கூறப்படுகிறது.

இவ்வாறான அபாயநிலை பற்றிய அறிகுறிகள் தற்போதே தென்படத் தொடங்கியுள்ளன. இன்னும் எட்டு மாதங்களில் நிகழவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வெளிநாட்டவர் பற்றிய விடயத்தை முக்கிய பிரசாரமாக கொள்ளப் போவதாக முன்னேற்றக் கட்சியின் (FrP) தலைவர் கார்ள் இ ஹாகன் கூறியுள்ளமை அரசியல் வட்டாரங்களில் மட்டுமன்றி அவரது கட்சி அங்கத்தவர்களிடையிலும் புதிய அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. வளரும் புதிய நாஜிகளின் போக்குகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலான ஹாகனின் பேச்சை முக்கிய அரசியற் கட்சிகளின் தலைவர்கள் கண்டித்துள்ளனர்.


இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள். நோர்வேயைப் பொறுத்தவரை இது பெரும்பாலும் பொருந்தும். அரசியற் கட்சிகளின் தலைமைப் பதவியுட்பட அனேக பதவிகளுக்குப் பெரும்பாலும் கட்சியின் இளைஞர் அமைப்புகளில் இருந்து படிப்படியாக முன்னேறியோரே நியமனம் பெறுகின்றனர். அந்த வகையில் கொண்டிருக்கையில் அவரது முன்னேற்றக் கட்சியின் இளைஞர் அமைப்பு, இனவாதத்திற்கு எதிராக ஏனையோருடன் இணைந்து செயற்பட முன்வந்திருப்பது, எதிர்காலம்பற்றிப் பயத்துடன் சிந்திப்பவர்களுக்குச் சற்று ஆறுதல் தரக்கூடிய ஒரு விடயமாகும்.

பெரிய நிலப்பரப்பையும் அதேவேளை குறைந்த சனத்தொகையையும் கொண்டுள்ள நோர்வேயில், வெளிநாட்டவர் தொகை ஏறத்தாழ 0.5%ஆகும். இங்குள்ள மூன்றாம் உலக நாட்டவர்களில் 90%பேர் தமது தகுதிக்கேற்ற உத்தியோகம் பெறுவதில்லை. தவிர உயர்தரக் கல்வித் தகைமை உடையோருக்குக் கீழ்நிலை உத்தியோகம் வழங்கப் படுவதிலும் பாரபட்சம் காட்டப் படுகிறது. பெரும்பாலான மூன்றாம் உலக நாட்டவர் வேலையற்றும், அரசின் சமூகக் கொடுப்பனவுகளில் சீவிக்க வேண்டிய நிலையிலும் உள்ளனர். இவர்களது அடிப்படைச் சமூகத் தேவைகள் பெரும்பாலும் பூர்த்தி செய்யப் படுவதில்லை. அண்மையில் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்களின்படி இவர்களில் மிகப் பெரும்பான்மையோர் உணர்ந்துள்ளோம். குறுகிய வட்டத்தினுள் வாழ்ந்துவரும் எம்மில் பலர், இந்த இளைஞர்களது முன்மாதிரியைப் பின்பற்றித் தங்களை மாற்றிக் கொள்வார்களா? இனவாதம், நிறவாதம், மொழிவாதம் எனப் பலரும் பல்வேறு திசைகளில் முரண்பட்டுக் கொண்டிருக்கும்போது இந்நாட்டின் எதிர்காலப் பொருளாதார சுபீட்சம் கருதி, தமக்குள் உள்ள பல்வேறு முரண்பாடுகளையும் மறந்து அனைத்து இனப் பாகுபாட்டிற்கு எதிராகப் போராடும் இந்த இளைய தலைமுறை அரசியற் தலைவர்களது நடைமுறைகளுக்கு எமது ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

*ஒன்று மாத்திரம் நிச்சயமானது; புலம்பெயர்ந்த நாடே எமது நாடு என்று எண்ணி வாழும் எமக்கு ஐரோப்பா பல பாடங்களைப் புகட்டும். அதற்குமுன் விழித்துக் கொள்ளாவிடில், இரண்டாம் உலக யுத்த காலத்தில் யூதர்களுக்கு நிகழ்ந்ததைவிட அதிக அழிவுகளை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.*

www.tamilarangam.net

www.tamilarangam.net



ம்பிக்கை – நாணயம் – உத்தரவாதம் – நியாயமான விலை
மற்றும் தரமான பொருட்களுக்கு நாடவேண்டிய இடம்
CITY TRADRES

நோர்வே அரசால் உறுதிப்படுத்தப்பட்ட
22 கரட் தங்கநகைகள்
மணிக்கூடுகள்
பாதணிகள்
ஜவுளிகள்
மின்சார உபகரணங்கள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற
CITY TRADERS

ஒஸ்லோ. குறுன்லொண்ட்
தேடான் நிலையத்திலுள்
CITY TRADERS

www.tamilarangam.net

– பிரசன்னா –


# ஹோரைட் சம்பவத்தின்

## மறுபக்கம் என்ன?

**1993.01.01**

*நடுநிசி 0.20*

மூன்று கார்கள் ஹாரைட்டில் இருந்து, உல்தைன்வீக் பக்கம் சென்றுகொண்டிருந்தன. மூன்றும் தமிழரின் கார்கள்தான். உல்தைன் சென்ட்ருமில் (Ulsten Sentrum) கார் பிறேக் அடித்துக்கொண்டு நிற்க, 10 தமிழ் இளைஞர்கள் இறங்கினார்கள். கைகளில் கொஞ்சம் 'அவுட்டு வாணம்'! சிறிது நேரத்தில் எல்லாம் தீர்ந்துபோய், தலையை உள்ளே நுழைத்துக்கொள்ள கார்கள் ஹாரைட்டை நோக்கிச் சென்றன.



*அதிகாலை 01.10*

ஹாரைட் தியேட்டருக்குக் கிட்டத்தட்ட 300 மீற்றர் தூரத்தில் உள்ள தமிழ்க் குடும்பம் ஒன்றின் வீட்டின் முன்பாக மறுபடி கார்கள் நின்றன. எல்லோரும் இறங்கிக் கொண்டனர்.

வீட்டில் இருந்து சிரித்துக் கொண்டு காரில் எல்லோரும் ஏறியதும், ஒன்றன்பின் ஒன்றாக ஹாரைட் நோக்கி வந்த கார்களில் ஒன்று (பச்சை நிறம்) தியேட்டருக்குச் சமீபமாக உள்ள சிறு வெளியில் நின்றது. காருக்குள் மூவர் இருந்தனர். இருவர் இறங்கி நடந்து செல்ல சாரதி மட்டும் இருக்கையில் அப்படியே இருந்தார். சிறிது நோத்திலெல்லாம் போன கார்களில் ஒன்று அருகில் வந்து நின்றது. காரில் சாரதி மட்டுமே இருந்தார். அவர் காரைவிட்டு இறங்கி சிறிது நேரத்தின் பின்னர் ஒருவரைக் கூட்டி வந்தார். பிறகு மூவரும் ஏதோ கதைத்துக் கொண்டனர். வந்தவர் பச்சைக் காரில் ஏறிக்கொள்ள, கார் புறப்பட்டதும் இறுதியாக வந்த காரில் சாரதி ஏறி உட்கார்ந்து கொண்டார்.

*அதிகாலை 01.30 அல்.35*

இருவரோடு கூடவே வல்லிபுரம் சிவநேசனும் காரை நோக்கி வந்துகொண்டிருந்தனர். (எல்லோருக்கும் சரியான தண்ணி) வெளியை அண்மித்தனர். இரண்டு நோர்வேஜியப் பெண்கள் 'Godt nytt aar' அறிவித்தனர். சந்தோஷம் தெரிவிக்க கைகளைக் குலுக்கி, அரவணைத்து முத்தமிட முயன்றபோது அவர்களோ தம்மை விடுவிக்க முயன்றனர். அப்போது சம்பவத்தின் கதாநாயகன் (நோர்வேஜியர்) இவர்களைத் தாக்கினார். கைகலப்பு மூண்டது.

இதற்கிடையில் சிவநேசனின் வீட்டுச் சொந்தக் காரராகிய நடேச (இவாது வீட்டு நிலக்கீழ் அறையிலேயே - Kjeller - சிவநேசன் வாடகைக்குக் குடியிருக்கிறார்) இவற்றை அவதானித்ததும் கீழே ஓடிவந்தார். கைகலப்பில் குடுபிடிக்கத் தொடங்கியது.....

தியேட்டரடியில் குடித்துக் கொண்டு கும்மாளம் கொட்டிய சுமார் 25 - 30 இளைஞர்கள் மொய்த்துக் கொண்டனர்.

ஒருபக்கம் காரின் கண்ணாடிகள் அடித்து நொருக்கி காரை 'சப்பல்' ஆக்கிக் கொண்டிருந்தது ஒரு கூட்டம். நடேசர் வயர்த் துண்டொன்றைச் சுற்றிச் சுற்றிச் சுழன்று அடித்துக் கொண்டிருந்தார். வயர்த் துண்டொன்றைப் பறித்துக்கொண்ட கூட்டம் அவரை நிலத்தில் போட்டுத் துவைத்துக் கொண்டிருந்தது. இதை மேலிருந்து கண்ட அவரது மனைவி ஓடிவந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்மேல் விழுந்து மீட்டுக் கொண்டார். சிவனேசன், உதடு வெடித்து மயங்கிப் போனார். மூன்றாம் நபர் 'ஸ்னோ' அள்ளும் சவள் ஒன்றினால் அதிரடித் தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அதுவும் பறிபோய் நிலத்தில் வீழ்ந்து கிடக்க ஒன்றன்மேல் ஒன்றாகக் கிட்டத்தட்டப் பத்துக் கைகள் கழுத்தை நெரித்துக் கொண்டிருந்தன.

அப்போது வேகமாகக் கார் ஒன்று வந்து 'பிறேக்' போட்டது - கட்டைகள் பொல்லுகளுடன் காரில் இருந்து குதித்த கூட்டம் தர்ம அடியைத் தொடங்கியது. கூட்டம் கலைந்து இரண்டு மூன்று கற்கள் வந்து விழுந்து மறைந்து போயின.....

லேற்றாகப் பொலிஸ் வந்தது. விசாரணை, அளவீடுகள், புகைப்படங்கள் எல்லாம் எடுத்து முடித்தாயிற்று. பயங்கரவாதிகளிடமும் விசாரணை முடிந்தாயிற்று. "இனி எதுவும் நடக்காது. அவர்களிடமும் கதைத்துவிட்டோம். நீங்கள் பயப்படத் தேவையில்லை. காரை நெரிக்க விடுகிறோம். காருக்கான காசை வாங்கித் தருகிறோம்." உத்தரவாதம் வழங்கிவிட்டுப் பொலிஸ்கார் விரைந்து போனது.

*02.01.93 சனிக்கிழமை*

கார் சம்பவம் நிகழ்ந்த இடத்திலேயே கிடையாகக் கிடந்தது. சீற்றில் தீ பற்றிய அடையாளங்கள் தென்பட்டன. காரைத் தீயிட்டுக் கொழுத்தும் முயற்சிகள் நிகழ்ந்தனவா? சூத்திரதாரிகள் யார்?

*03.01.93 ஞாயிற்றுக்கிழமை*
அதிகாலை 04.00மணி இருக்கலாம்

நடேசரின் வீட்டு (மேல்) கதவுமணி அடித்தது. சிறிது இடைவேளையின் பின்னர் மீண்டும் ஒருதடவை. தமிழர்களைப் போலத் தெரியவில்லை. இந்த நேரத்தில் யார்? சந்தேகம் எழுந்தது. பயங்கரவாதிகள்! கதவின் கண்ணாடியை இரும்புக் கம்பியால் உடைத்து வெள்ளைக்கை ஒன்று உட்புறமாகத் திறந்தது. நடேசரும் மனைவியும் ஓடிச்சென்று படுக்கை அறைக் கதவைச் சாத்தித் தள்ளிப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். ஆவேசமாக உள்ளே நுழைந்த மூன்று பயங்கரவாதிகள் ரெலிபோனை அடித்து உடைத்தார்கள். லைட்டைப் போட்டார்கள். (பயங்கரவாதிகளில் ஒருவனின் சகோதரி அந்த வீட்டில் ஏற்கனவே இருந்திருந்ததால் அவனுக்கு எல்லா இடமும் அத்துபடி) படுக்கை அறையின் கதவைத் தள்ளி இடித்தார்கள். ஆவேசமாக இரும்புக் கம்பியால் கதவைக் குத்தினான். மறுபக்கத்தில் கதவைத் தள்ளிப் பிடித்தபடி நின்ற நடேசரின் மனைவியின் கண்ணைச் சிராய்த்தபடி கம்பி உள்ளே நுழைந்தது. கண் தப்பியது. கதவும் திறந்தது.

மனைவியோ இரவு உடுப்புடன் யன்னலைத் திறந்துகொண்டு குதித்துவிட்டார். "ஐயோ! என் புரிசனையும் பிள்ளைகளையும் கொல்லுறாங்கள்" என்று அலறியடித்துக் கொண்டு கிட்டத்தட்ட 300யார் தூரத்தில் உள்ள தமிழர் வீட்டுப் பக்கமாக ஓடினார்.

நடேசரோ இரண்டு பிள்ளைகளையும் கட்டிப்பிடித்தபடி கட்டிலில் கிடந்தார். பயங்கரவாதிகளோ பிள்ளைகளை இழுத்துப் பறித்தனர். பிள்ளைகளை ஒருவன் பிடிக்க, இன்னொருவன் நடேசரை அமத்திப் பிடிக்க, மற்றவன் கம்பியால் நடேசரின் உடம்பின் எல்லாப் பாகங்களையும் பதம் பார்த்துக் கொண்டான். இரத்தம் கசிந்து அலறல் வீட்டை நிறைத்தது. கண்டிக் காயம் கறுத்தது. மாறிமாறி மூவரும் கம்பியால் அடித்துக் குதறினர்.

கீழ்வீட்டில் சிவநேசனுக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. கூக்குரல் காதைக் கடிக்கப் பிள்ளைகள் பதறிப்போய்த் தாயைக் கட்டிப் பிடித்தன. அவசர அவசரமாக மிளகாய்த் தூளைக் கரைத்துக்கொண்டு குளியல் அறைக்குள் அடைக்கலம் ஆனார்கள். வெளியில் நின்ற ஒருவன் கண்ணாடிகளை அடித்து நொருக்கத் தொடங்கினான். கண்ணாடிச் சத்தம் சிறிது சிறிதாக ஓய்ந்தது.

20 நிமிடத்தில் எல்லாம் முடிந்துவிட்டது. வெளியேவரப் பயமாக இருந்தது. கத்தி ஒன்றை எடுத்துக் கொண்டு சிவனேசன் வெளியே வந்தார். ஒருவரும் இல்லை. எல்லோரும் போய்விட்டார்கள்.

பரபரப்புத் தொடங்கியது. பொலிஸ் வந்துவிட்டது. பத்திரிகை நிருபர்கள், தொலைக்காட்சி நிருபர்கள், கமராக்கள் எல்லாம் மொய்த்துக் கொண்டன. ஒரு கொட்டில் படுக்கையில் வைத்து நான்கு பயங்கரவாதிகளைப் பொலிஸ் கைது செய்தது. ஹாரைட் நகரசபையைச் சேர்ந்த மூவரும் உல்தைன்வீக்கைச் சேர்ந்த ஒருவருமாக மொத்தம் 13 நபர்கள் இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் சில செய்திகள். நான்குபேர் பயங்கரவாதச் செயலில் ஈடுபட சற்றுத் தொலைவில் ஏனையோர் சுற்றிநின்று காவல் செய்தார்களாம். அவர்கள் தம்மைப் பார்வையாளர்கள் என்று கூற மறுத்ததாகவும் ஊர்ஜிதமற்ற செய்திகள். மூவருக்கு மட்டும் சிறைவாசம். ஒருவருக்கு விமான ரிக்கற் கொடுத்துத் திருப்பி அனுப்பி வைக்கப் பட்டார்.

*05.01.93 செவ்வாய்க்கிழமை*

700க்கு மேற்பட்ட மக்கள் (வெளிநாட்டவர் உட்பட) 'மெழுகுவர்த்தி' ஊர்வலம் நடாத்தினர். ஊர்வலம் கோயில் வாசலை அடைந்ததும் கோயிலுக்குள் வரமாட்டோம் என இளைஞர்களில் பெரும்பகுதி அடம்பிடித்தது. பெரிய முகங்கள் குசுகுசுத்து எல்லோரும் கோயிலுக்குள் போய்விட்டார்கள்.

www.tamilarangam.net

தேவாலயம் நிரம்பி வழிந்தது.

01.01.93 அன்று தமிழர்களின் 'தர்ம அடி'யில் சிக்கிக் கொண்ட அப்பாவிப் (நொஸ்க்) பொதுமக்கள் சிலர் கட்டுகளுடன் தடியை ஊன்றியபடி தேவாலய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டது நெஞ்சத்தைக் கிள்ளுவதாக இருந்தது. மன்றாட்டுப் பிரசங்கம், மேயரின் 'வெட்கப் படுகிறோம், தலைகுனிகிறோம்' என்ற உரையோடு சமாதான முகங்கள் மகிழ்ந்தன. ஆனால் தீயணைக்கும் படையினரின் கண்காணிப்புடன் நிகழ்ந்த முதலாவது ஆராதனையும் இதுவே. கோயிலைக் கொழுத்துவோம் என்ற தொலைபேசி மிரட்டல்தான் இதற்குக் காரணமாம்.

பயங்கரவாத நடவடிக்கையின் பாதிப்புகளுக்கு உண்டான (தாக்குதலுக்கு உள்ளான வீட்டை) நட்ட ஈட்டை நகரசபை ஏற்குமென மேயர் உறுதியளித்துள்ளார். பாதிப்புகளுக்கான நட்ட ஈட்டை ஏன் நகரசபை வழங்க முன்வந்தது? இது பயங்கரவாதமானால் பயங்கரவாதிகளே நட்டஈட்டை வழங்கவேண்டும். நகரசபை ஏற்பதாயின் இது நிறவாதமா?

<u>கடந்த காலம் இதுபற்றி என்ன கூறுகிறது?</u>

87ஆம் ஆண்டின் முற்பகுதியில் அரசியல் தஞ்சம் கோரிய வெளிநாட்டவர்களது விண்ணப்பப் படிவங்கள் கையாளப்பட்டு முடிவு வரும்வரை, அகதிகளுக்கான தற்காலிகத் தங்குமிடம் ஒன்றை ஹாரைட்டில் நிர்மாணிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டனவாம். ஹாரைட் நகரசபையின் அரசியல் வட்டம் முதலில் கூடி வாக்கெடுப்பும் நிகழ்ந்ததாம். அந்த வாக்கெடுப்பில் சுயேச்சை வேட்பாளரான இன்றைய மேயர் எய்னார் ஹொல்ம் (Einar Holm) எதிர்த்து வாக்களித்திருந்தாராம் என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும் போலிருக்கிறது.

87இன் நடுப்பகுதியில் தமிழ் அகதிகளின் தற்காலிக தங்குமிடமாக ஹாரைட் ஹோட்டல் இயங்கிக் கொண்டிருந்தது. "தமிழர்களை வெளியேற்றுங்கள்" என்ற சுவரொட்டிகள் முளைத்தன. ஹோட்டலைத் தரைமட்டம் ஆக்குவோம் என மறைமுக மிரட்டல்களும் நிகழ்ந்தனவாம். செஞ்சிலுவைச் சங்கத்தின்கீழ் வேலை செய்வோரது வாகனங்கள் முழுமையான காப்புறுதியைப் பெற்றுக் கொண்டன. திடீரென ஒரு நாள் - சனிக்கிழமை இரவு என நினைக்கிறேன் - ஹோட்டலுக்கும் தேவாலயத்திற்கும் இடைப்பட்ட சிறுதுண்டு காணிக்குள் சிலுவையை எரித்து 'யுத்த அறிவிப்புச்' செய்யப்பட்டது. தமிழர்களை நகரசபையில் இருந்து திருப்பி எடுக்குமாறு அரசை வலியுறுத்தும் 'கையெழுத்து வேட்டை' பொதுமக்களிடம் குதிரை வேகத்தில் நிகழ்ந்தது.

87இன் கடைசிப் பகுதியில் பல தமிழர்களது விண்ணப்ப முடிவுகள் வரத் தொடங்கின.

## போதை ஏறினால்...

ஒஸ்லோ வீதிகளில் அதிக போதையில் வாகனம் ஒட்டியமைக்காகக் கைது செய்யப் படுவோரில் அறுபது வீதமானோர் சாரதிய அனுமதிப் பத்திரமும் இல்லாமலேயே வாகனம் ஓட்டுகின்றனர்.

ஒரு வருடத்தில் ஒஸ்லோ வீதிகளில் அளவுக்குமீறிய போதையில் வாகனம் ஓட்டிக் கைதாவோரின் எண்ணிக்கை ஏறத்தாழ ஆயிரம் ஆகும். உலகிலேயே மிகக் குறைந்தளவு அற்ககோல் ரத்தத்தில் இருந்தாலே வாகனம் ஓட்ட முடியாத நாடுகளில் நோர்வேயும் ஒன்று.

- சாரதி -

பெரும்பாலோர் இரு வருடத் தற்காலிக வதிவிட அனுமதி பெற்றனர். இந்நிலையில் பக்கத்து நகரசபைகளான உல்ஸ்தைன்வீக் (Ulstcinvik), ஹாரொய் (Haroy)போன்றவை தமிழர்களைத் தற்காலிகமாகக் குடியமர்த்த முன்வந்தன.

88ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தமிழ் - நொஸ்க் இளைஞர்களுக்கிடையில் கைகலப்பு ஆரம்பமானது. இதுவும் முத்தத்தால் வந்த பிரச்சனையே. தண்ணி எண்டால் தப்புக்குத் தண்டனை கிடையாதுதானே. சமாதானம் கைகொடுத்தது.

88இன் நடுப்பகுதியில் தமிழர்களை வெளியேற்றுங்கள் என்ற கையெழுத்து மகஜருக்குப் பதிலளிக்க அரச தரப்பில் இருந்தும், வெளிநாட்டவர் அமைச்சத் தரப்பில் இருந்தும் பிரமுகர்கள் விமானத்தில் பறந்து வந்தனர். சம்பந்தப் பட்டவர்களுக்கு அழைப்பு விடப்பட்டது. தேவாலயத்திலோ அல்லது சமய சம்பந்தமான இடங்களிலோ கூடிப் பேச மறுத்தனர். பிரேரணைகளும் கிழித்தெறியப் பட்டன.

சற்றுக் கால இடைவெளியின் பின் நொஸ்க் ஈரான் இளைஞர்களுக்கிடையில் மோதல் நிகழ்ந்தது. மனிதத் தன்மையற்ற முறையில் ஈரான் நண்பரொருவரைக் கொற இழுவையாக நிலத்தில் 500 மீற்றர்வரை இழுத்துக் கொண்டுசென்று அடித்தனர். இந்தக் கைகலப்பில் தமிழர்களும் ஈரானியர்களுடன் சேர்ந்துகொண்டனர்.

www.tamilarangam.net

1990இல் ஹாரைட்டில் அகதிகள் முகாம் கட்டிடவேலை தொடங்கியது. இரவோடு இரவாக அத்திவாரத்தைத் தூர்த்துவிட்டனர். சிரமத்தின் மத்தியில் அகதிகள் முகாம் கட்டி முடிக்கப் பட்டது. பிந்திய நாட்களில் தமிழர் - நொஸ்க் ரக்சி டிரைவர், தமிழர் - ஈரானியர் மோதல்கள் நிகழ்ந்தன. பயங்கரவாதிகள் எனக் கருதப்பட்ட ரவிசங்கர், பீற்றர் ஆகியோர் கைது செய்யப்பட்டுச் சிறையில் இடப்பட்டனர்.

இதுபோன்ற சட்டத்தையும் ஒழுங்கையும் நோர்வேஜிய தமிழ் மக்களது உறவையும் பாதிக்கும் செயல்களைக் கண்டிப்பதோடு மாத்திரமன்றி, நிறுத்தவும் அனைத்துத் தமிழ் மக்களும் முன்வரவேண்டும். தமிழர்கள் பக்கமுள்ள தவறுகளை எச்சந்தர்ப்பத்திலும் பகிரங்கமான முறையில் ஒத்துக்கொள்ள முன்வரவேண்டும். இதுவே நிகழ்காலங்களில் நிற, இனவாதிகளது செயல்களைக் குறைக்க உதவும்.

கடந்த வருடம் நடுப்பகுதியில் அகதிகள் முகாமில் குண்டு வைக்கப் பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துப் பொலிசார் விரைந்து சோதனை இட்டனர். உண்மையில் குண்டு வைக்கப் பட்டிருந்ததா இல்லையா என்பது இதுவரை தெரியாது. ஆனால் ஆட்களின் நடமாட்டம் குறைக்கப் பட்டது. ஒருகிழமை வித்தியாசத்தில் ஹாரொய்யில் (Haroy) வெளிநாட்டவர் ஒருவர் காரில்வந்த நோர்வேஜியர்களால் தாக்கப் பட்டார். (இத்தாக்குதலை நிகழ்த்தியோர் ஹாரொய்க்கு வெளியில் உள்ளவர்கள் என நொஸ்க் பத்திரிகைகள் அறிவித்தன) இவ்வாண்டு கிறிஸ்மஸ் விடுமுறைக்கு ஹாரொய்யில் தமிழர் ஒருவரது வீட்டின் யன்னல் கதவுகள் பிரித்தெறியப்பட்டு, உள்ளே நுழைய முயற்சி செய்யப்பட்ட அடையாளங்கள் காணப்பட்டன. (வீட்டுக்காரர் சுற்றுலா சென்றிருந்தமையால் இது நிகழ்ந்திருக்கலாம்)

இதுவரை எல்லாமாக 15க்கு மேற்பட்ட அசம்பாவிதங்கள் நிகழ்ந்துள்ளன. இருப்பினும் கடைசியாக நிகழ்ந்த சம்பவம் இனவாதத்தின்மீது பயங்கரவாத முத்திரை குத்தப்பட்ட திட்டமிடப்பட்ட சம்பவமாகும். இருப்பினும் இச்சம்பவம் குறித்து தமிழர்கள்மீது நோர்வேஜியர்களுக்கு அனுதாபம் ஏற்பட்டதென்னவோ உண்மைதான். ஆனாலும் பயங்கரவாதிகளின் சமீபகால நடவடிக்கையான இரு (நொஸ்க்) வயோதிபர்கள்மீது தாக்குதல், வீடெரிப்பு போன்றவையால் நோர்வேஜிய மக்களுக்கு இவர்கள்மீது ஏற்பட்ட கசப்புணர்வு, எம்மீது எழுந்த அனுதாப அலைக்குப் பக்கபலமாக அமைந்துவிட்டதும் எனலாம். இவையெல்லாம் எவ்வளவு காலத்திற்கு? கலாசார முரண்பாட்டைச் சரியான முறையில் கையாளவோ, எமது வாழ்நிலைப் பாதுகாப்பைக் கோரவோ, நிறவாதத்திறகு முகம் கொடுக்கவோ தமிழ் அமைப்புகள் இனியாவது முற்படுமா? முழுச் சமூகமும் எப்போது விழித்தெழப் போகிறது?

இச்சம்பவம் இன்று ஓய்வுக்குவர, அபிப்பிராய பேதங்கள் மட்டும் முடிச்சவிழாது மூட்டையாக மூலைகளில் கிடக்கிறது. சம்பவ தினத்தன்று ரெலிபோன் மணி அடித்து தொல்லை கொடுத்தது. நண்பர் ஒருவர் எடுத்துக் காதுக்குள் சொருகிக் கொண்டார். மறுமுனையில் தமிழ்க் குரல்தான். "என்ன ஹாரைட்டில் ரத்தக் களரியாம்? இவையளுக்கு இதெல்லாம் நல்லா வேணும்" ஒரு உகப்பு உகப்பினார். நண்பரோ நிதானமாக "என்ன இருந்தாலும் ஒரு ஃபமிலி வீட்டுக்குள்ள புகுந்து இப்பிடி நடப்பதெல்லாம்...." என்று இழுத்தார். மறுமுனையில் "உங்களை இங்கை இருக்கவிட்டதும் காணாது அவங்களோடை அதுவும் அவங்கது நாட்டிலை எங்களுக்கு வெட்கமாக் கிடக்கு. நாங்கள் எப்பிடித் தலைநிமிர்ந்து நடக்கிறது? வந்தால் வந்த வேலையைப் பார்த்துக்கொண்டு, அடித்தால் அடியை வேண்டிக் கொண்டு...." எசமான் நேசம் நீண்டுகொண்டு போனது. நண்பர் துண்டித்துக் கொண்டார்.

"உண்மையிலை என்னண்ணை நடந்தது?" வயதுபோனவர் நடையைக் குறைத்தார். "என்னத்தைத்

## தூள் அடிக்கும் சிறுவர்கள்

இலங்கையில் தற்போது கிட்டத்தட்ட 30 ஆயிரம் சிறுவர்கள் போதைவஸ்து பாவிப்பவர்களாக உள்ளதாக அண்மையில் எடுத்த கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

அத்தோடு தற்போது இலங்கையில் கிட்டத்தட்ட 11 இலட்சம் சிறுவர்கள் பாடசாலை செல்வதில்லை என அறியப்படுகிறது. இது இலங்கை வரலாற்றில் ஒரு மோசமான நிலையாகும். இதற்குக் காரணமாக போர்க்கால சூழ்நிலையை குறிப்பிட்டேயாக வேண்டும். போரினால் குடிபெயர்ந்தவர்களும், பாடசாலைகள் மூடப்பட்ட நிலையிலும், உடைந்த நிலையிலும் இருப்பது முக்கிய காரணமாகும். வறுமை காரணமாக பல இலட்சம் சிறுவர்கள் இடையிலேயே கல்வியை நிறுத்தி வருகின்றனர்.

மதி

www.tamilarangam.net

தம்பி சொல்லுறது? எங்கட பெடியளிலும் பிழை இருக்குதுதான். பிரச்சனை வருமெண்டு தெரியும். சில விசயங்களைத் தவிர்த்துக் கொண்டிருக்கலாம். எங்களுக்கெதுக்கு வீண் பிரச்சனையை?" நடையில் வேகம் தெரிந்தது. திடீரென முதுகைத் தட்டி, "தம்பி எல்லாப் பிரச்சனையையும் பார்க்கிறன். எங்கட ஆக்கள் 'சுயதணிக்கை' செய்யினம். பிரச்சனையைச் சரியாப் பார்க்கவோ, ஒற்றுமையை வளர்க்கவோ இதுவும் தடையாக இருக்குது. நாங்கள் எப்ப திருந்தப் போறம்?" கிளவுஸ்க்குள் கையை நுழைத்துக்கொண்டு "ஹாட" என்று விடைகொடுத்தார்.

"ஹாய்!" சிகரெட்டை நன்றாக உள்ளே இழுத்துப் புகையை மேலே விட்டுக்கொண்டு இடைமறித்தாள் ஒரு நோர்வேஜியப் பெண். "ஹாரைட் பிரச்சனையைப் பற்றிச் சரியாகக் கவலைப் படுகிறோம். நீ கோபமாக இருக்கிறாய் போல கிடக்கு. ஆனாலும் சில விசயங்களைக் கதைக்கவேணும் போல கிடக்கு. இங்குபார், நாங்கள் உங்களது கலாசாரத்துக்கு மதிப்பளிக்கிறோம். நீங்கள் எவ்வளவு தூரம் எமது கலாசாரத்துக்கு மதிப்பளிக்கிறீர்கள் என்றால்....." மீண்டும் புகையை இழுத்துக் கொண்டாள். "ஒரு விசயம், உங்கட கலாசாரத்தில 'ஒரு ஆண் ஒரு பெண்' என்கிறீர்கள். ஒரு தமிழ்ப் பெண்ணைக் கட்டிக்கொண்டவனைத் தவிர வேறு எவராவது முத்தமிடுவதைக்கூட உங்கள் கலாசாரம் அனுமதிப்பதில்லையாம். ஆனால் ஆண்கள் மட்டும் விதிவிலக்காய் இருப்பதை எப்படி அனுமதிக்கிறது? இதை என்னால் புரிய முடியாமல் இருக்கு" என்று கூறி மீண்டும் இழுத்துக் கொண்டாள், புகை மேலே வட்டம் போட்டது. (தமிழ்ப் பெண்களின் வாழ்நிலையின் உத்தரவாதத்தை ஆண்கள் இன்னும் தமது கைகளில் பிடிவாதமாக வைத்திருப்பதை, எப்படித் தலைகுனியாமல் சொல்லித் தொலைப்பது?) "இன்னும் ஒன்று, நீங்கள் உங்கள் கலாசாத்தை இங்கு இறுக்கிப் பிடிப்பதுபோல, எங்களது சனங்களும் (நோர்வேஜியர்களும்) எங்களது கலாசாரத்தை எங்களது சனத்துக்குள்ள மட்டும் இறுக்கிப் பிடித்தால் எப்படிப் பார்ப்பியளோ தெரியாது. நானும் ஒரு பெண். என்னை ஒன்றுக்கு மேற்பட்டோர் முத்தமிடலாம். ஆனால் எல்லோரும் (வேறு கலாசாரம் உட்பட) விரும்பும் போதெல்லாம் முத்தமிட நான் அனுமதிக்க வேண்டும் என்ற பொதுவிதி இல்லைத்தானே நீ என்னைத் தவறாக நினைக்கமாட்டாய் என்று நினைக்கிறேன். சரி பிறகு கதைப்போம்"

கதவைத் தட்ட "கொம் இன்", உள்ளே தலையை நுழைக்க "ஹாய்! எப்படி இருக்கிறாய்? ஏன் அண்டைக்குக் கோயிலுக்கு வரவில்லை? ஓ... உனக்குக் கோயிலெண்டால் பிடிக்காது, மறந்தே போனேன்"

"இல்லை எனக்குச் சுகமில்லை"

"எனக்குத் தெரியும், சும்மா கேட்டனான். பொது விடயத்திலை உங்களைக் கோயிலுக்கை கண்டனான். உன்னைப் போலத்தான் நானும் எல்லா நேரமும் கோயிலுக்குச் செல்வதில்லை. அன்றும் மெழுகுதிரி ஊர்வலம் கோயிலை அடைந்ததும் இளைஞர்கள் கோயிலுக்குள் செல்ல மறுத்தனர். பின்னர் ஏதேதோ பேசி உள்ளே போக வைத்தனர். இதுகூட எனக்குப் பிடிக்கேல்லை. மக்களிடம் சில விசயங்களைத் திணிக்கிற மாதிரிக் கிடக்கு. நீ என்ன நினைக்கிறாய்?"

"சரி, நீ வந்த விடயத்தைச் சொல்லு, எனக்கு வேறு ஒரு 'ஆவ்த்தால்' இருக்கு"

நன்றி: தகவல் கொடுத்த நண்பர்களுக்கு



## பிறகு..........

*சம்பவம் நிகழ்ந்து சில தினங்கள் பின்னர் இனவாத அமைப்பான எ.ஃப்.எம்.ஐயின் தலைவர் ஹாரைட் பிரதேசத்திற்கு உத்தியோக பூர்வமற்ற முறையில் வந்து சென்றதாக இன்னொரு தகவலும் உண்டு. இவ்வாறாக ஹாரைட் சம்பவத்தின் பின்னணியில் உள்ள திரை முற்றாக விலகிவிடவில்லை.*

*எது எவ்வாறிருப்பினும் நிற, இனவாத பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக விழிப்புடன் இருப்பது நல்லதுதானே.*

www.tamilarangam.net

## பனி


பார் எனும் பூமிமகளைப் பார்
பச்சை வண்ண ஆடை கட்டி
பகவானின் தேர்பூட்டி
பருவமங்கை போல் பவனிவந்தவள்

'பனி' என்னும் பாதகனால்
பலவந்தம் செய்து, பாதிக்கப்பட்டு
வெண்ணாடை போர்த்து
விதவை 'யாகி நிற்கிறாளே!

சூடு கொண்ட உடம்பு
பிணமாகிவிட்டால் குளிர்ந்துவிடும்
இப்பூமி மகளும் குளிர்வதால்
பிணமாகி விட்டாளோ?

ஸ்ரீபன்
- ஒஸ்லோ -

## நோர்வேயிலுள்ள வெளிநாட்டவர்கள்



www.tamilarangam.net

இந்த மகிழ மரங்களிரண்டும் அவனுக்குத் தோழர்களாயிருந்த அன்றுபோலத்தான் இன்றும், இந்த மடத்தின் வாசலில் சூரிய ஒளியைக் கசியவிடாமல் பரந்து கர்வத்துடன் நின்று கொண்டிருக்கின்றன. மடத்தின் பின்னாலிருக்கும் கேணி வழக்கம்போல இக்கோடையிலும் பாசிபடர்ந்து வற்றி அலங்கோலமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. எதிரே சற்றுத் தள்ளிப் பிள்ளையார் கோவில், அதனைச் சுற்றிவரப் படர்ந்திருந்த மணற் பரப்பு, கோவிலின் இடதுபுறத்தில் சற்று ஒதுக்கமான பகுதியில் கிடுகுக் கொட்டிலின் கீழே இளைப்பாறிக் கொண்டிருக்கும் தேர். சுந்தரின் எதிரே விரிந்திருந்த புற்றளைப் பிள்ளையார் கோவிலின் சூழலில் மாற்றங்களெதுவும் பெரிதாகத் தோன்றவில்லை.



[illegible]

ஜெயம் சுவீடன்

மகிழமரத்தின் சிறார்கள் போன்ற அந்தப் பழுப்புநிறக் குருவிகள் வழக்கம் போலவே கீச்சிட்டுத் தங்களுக்குள் கும்மாளமடித்துக் கொண்டிருந்தன. அவைகளையே சில நிமிடங்கள் அண்ணார்ந்து பார்த்துக் கொண்டு தன்னை மறந்திருந்த சுந்தர், 'இவைகள் அன்றிருந்த அதே குருவிகள்தானா' என்று தனக்குள் யோசித்துக் கொண்டான்.

மனித நடமாட்டம் எதுவுமின்றி இந்தச் சூழல் இப்போது அவனுக்குப் பாலைவனத்தை ஞாபகப்படுத்த முற்பட்டது.

மடத்துக்கும் கோவிலுக்கும் இடையே ஓடும் 'கிறவல்' ஒழுங்கையின் ஓரமாகப் பெருங் கூச்சலுடன் பந்து விளையாடும் சிறுவர்கள், இந்த மடப் படிக்கட்டுகளில் இருந்துகொண்டு உலக அரசியல் முதல் தென்னிந்திய சினிமாவரை எதையும்விடாமல் தீவிரமாக விவாதித்துக் கொள்ளும் இளைஞர்கள், கள்ளுக் குடித்துவிட்டு உதடுகளில் மொய்க்கும் இலையான்களைத் தமது குறட்டை ஒலியால் துரத்தமுயன்றபடியே 'பிரண்டு கிடக்கும்' ஓரிரு கிழங்கள்...... இவர்களையெல்லாம் இந்த மடம் இழந்துவிட்டதா?

ஆறு வருடங்களாக சவூதி அரேபியாவில் வேலை செய்துவிட்டுத் திரும்பியிருந்த சுந்தருக்கு வடஇலங்கை இராணுவ ஆக்கிரமிப்பினாலும் தீவிரவாத இயக்கங்களின் ஆட்சியினாலும் மாறியிருந்த கோலத்தைக் கண்டு ஜீரணித்துக் கொள்ள இயலவில்லை.

கண்ணிவெடிகளால் தகர்க்கப்பட்டுவிட்ட வெறிச்சோடிய வீதிகளும், குண்டுவீச்சுகளுக்கு இரையாகிப் பாழுஞ் சுவர்களாக மாறிவிட்டிருந்த கட்டிடங்களுமே அவனை வரவேற்றன. விற்பதற்கு எதுவுமின்றிப், பெயருக்கு ஏதாவது ஒரு 'ஸ்டோர்ஸ்' என்ற

www.tamilarangam.net

பலகையை மாட்டிக்கொண்டு திறந்து வைக்கப் பட்டிருந்த கடைகளினருகே எப்போதாவது காணக்கிடைக்கும் சோர்வையும் ஏமாற்றத்தையும் பூசிக்கொண்ட முகங்களும் அவனைச் சொந்த நாட்டிலேயே அந்நியனாக உணரவைத்தன.

"நீ....... அன்னத்தின்ரை மோனெல்லே!"

இடதுகையை விரித்து புருவங்களுக்கு மேல் வைத்துக் கண்களைச் சுருக்கியபடி மெல்லிய கரகரத்த குரலில் விசாரித்த கிழவியை இலகுவாக அடையாளங் கண்டுகொள்ள முடிந்தது.

தனக்கு அடையாளந் தெரிந்தாலும், எதிரிலிருக்கும் நபரைப் பேச்சுக்கு இழுப்பதற்காக இப்படிப் பேச்சை ஆரம்பிக்கும் இந்தக் கிழவி கோவிலுக்குப் பின்னாலிருக்கும் வீதியில் வசிப்பவள்.

கிழவி தனது உத்தியை மாற்றிக் கொள்ளவில்லையென்று எண்ணிக்கொண்ட சுந்தர், புன்னகைத்தானே தவிரப் பதிலிறுக்கவில்லை.

"எப்பவெடா மோனை நீ திரும்பி வெளிநாட்டுக்குப் போறாய்?"

ஆவலுடன் விசாரித்த கிழவி பிள்ளையாரைக் கூப்பிட்டபடி கையிலிருந்த ஊன்றுகோலை அருகே வைத்துக் கொண்டு, உயரங் குறைந்த படிக்கட்டுகளில் ஒன்றில் அமர்ந்துகொண்டான்.

'கிழவியிடம் நன்றாக மாட்டிக் கொண்டேன்'என்று நினைத்துக் கொண்ட அவன், "அதைப்பற்றி இன்னும் முடிவொண்டும் எடுக்கேல்லை" என்று அசுவாரசியத்துடன் பதிலளித்தான்.

"இஞ்சை இருந்து என்ன செய்யப்போறாய்? எவன் எவனை எப்ப சுடுவானெண்டு தெரியாது.... நாங்கள்தான் கிழடுகள்... போய்ச் சேரவேண்டியதுகள். அதுசரி மோனை.... உனக்குக் கலியாணப் பேச்செண்டு கேள்விப்பட்டன். எந்தமட்டிலை கிடக்குது?"

நிறுத்தாமலே பேசிக்கொண்டிருந்த கிழவி அவனது பொறுமையைச் சீண்டிக் கொண்டிருந்தாள்.

"இஞ்சைவந்தா இயக்கங்களெல்லாம் காசு பறிக்கிறாங்களெண்டு கலியாணம் முடிக்கிறதுக்குக்கூட ஒருத்தனும் இங்கை வாறாங்களில்லை. என்ரை பேரப்பெடியன்.... அவன்தான் உன்னோடை சுத்தித் திரிவானே! அவனுக்குப் பெட்டைபேசி சேமனிக்கு அனுப்பினனவை, நகைகளெல்லாம் குடுத்தும் ஏழுலச்சம் சீதனம் வாங்கினவை...."

கிழவி அவனது நண்பன் சிவாவைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். நண்பர்களென்று சொல்லிக்கொள்ள இப்போ எவருமே ஊரிலில்லை. ஐரோப்பா அமெரிக்கா என்று வெவ்வேறு கண்டங்களை நோக்கிச் சென்றுவிட்டவர்களைத் தவிர ஓரிருவர் கொழும்புத் தமிழர்களாகி விட்டிருந்தார்கள்.

'பொத்' என்ற சத்தத்துடன் மகிழம்பழமொன்று கீழே தெறித்துத் துள்ளி விழுந்தது. மரக்கிளைகளுக்கும் மடத்தின் பாசி படர்ந்திருந்த ஓட்டுக் கூரைக்குமாக அணில்கள் தாவிக் கொண்டிருந்தன. 'எங்களுடன் போட்டிபோட்ட நீயும் உனது தோழர்களும் தோற்றோடி விட்டீர்களா' என்று அவை ஏளனஞ் செய்வதாகத் தோன்றியது அவனுக்கு.

'உங்களுக்கென்ன அதிர்ஷ்டசாலிகள்!' என மனதுக்குள் அவைக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான், அவன்.

ஏற்கனவே மெதுவாக நகர்ந்துகொண்டிருந்த நிமிடங்கள் தமது வேகத்தை இன்னும் குறைப்பதாகவே தோன்றியது. கலா இன்னும் வரவில்லை. அவளுக்காகக் காத்திருப்பது இதுவொன்றும் முதற் தடவையில்லாவிடினும் இன்றைய காத்திருப்பை மிகவும் வித்தியாசமாக உணர்ந்தான் அவன்.

www.tamilarangam.net

முன்பெல்லாம் அவள் கோவிலுக்கு வருஞ் சந்தர்ப்பங்களில் வழியிலிருக்கும் ஆளுயரக் கிடுகுவேலியடைத்த ஒழுங்கையில் ஓரிரு நிமிடங்கள் பேசிக் கொள்வதற்காகக் காத்திருக்கும்போது கிளர்ந்தெழும் பரபரப்புக் கலந்த கிளுகிளுப்பு இப்போது அவனுக்குள் காணாமற் போய்விட்டிருந்தது.

சுந்தருடன் கதைக்க முயன்று தோற்றுப்போன கிழவி இப்போது அவ்விடத்தை விட்டு அகன்று கோவில் வாசலில் தூணொன்றில் சாய்ந்திருப்பதை இங்கிருந்தே காணக் கூடியதாக இருந்தது.

கையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்த சுந்தரின் கண்களில் அகஸ்மாத்தாகத் திகதி பட்டபோதுதான் இன்று கலாவின் பிறந்தநாள் என்று ஞாபகத்துக்கு வந்தது.

சவூதியிலிருந்து திரும்பியபின் அவளைச் சந்திக்க வேண்டுமென்று அவன் ஓரிரு தடவைகள் நினைத்தாலும் அதற்கான நேரத்தை ஒதுக்க முடிந்ததில்லை. ஆனால் கடந்த வாரத்தில் எதிர்பாராமலே அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது.

சுந்தர் அப்போது பேரூந்தில் பயணமாகிக் கொண்டிருந்தான். திடீரென்று பஸ்வண்டி தீவிரவாதிகளால் வழிமறிக்கப் பட்டது. சில தீவிரவாதக் குழுவினரின் வழிப்பறிகள், கொள்ளைகளை நாளாந்தம் கேட்டறிந்தவர்களோ அனுபவித்துப் பாதிக்கப் பட்டவர்களோதான் பயணஞ் செய்து கொண்டிருந்ததால் அடுத்து நடக்கப் போவதையெண்ணிக் கலங்கிக் கொண்டிருந்தனர். வெளிநாட்டில் இருந்து திரும்பியதுமே ஒரு கணிசமான தொகையொன்றைத் தீவிரவாதிகளிடம் சுந்தரும் இழந்திருந்தான்.

கர்வத்துடன் துப்பாக்கிகளைச் சுமந்து கொண்டிருந்த இளைஞர்களிருவர் வாகனத்தினுள் ஏறி அனைவரையும் கீழே இறங்கும்படி பணித்தனர். வேறொரு வழியாக வந்திருந்த இன்னொரு குழுவினர் ஏற்கனவே கீழே நின்று கொண்டிருந்தார்கள்.

அவர்களிலொருத்தியாக நின்றிருந்த கலா சுந்தரை இலகுவாக அடையாளங் கண்டுகொண்டு நெருங்கினாள்.

"என்ன நல்லா மெலிஞ்சு போயிட்டியள்?"

எதிர்பாராமல் சந்தித்த அவளுடன் 'சட்'டென்று எதுவும் பேசத் தோன்றாது மௌனமாக நின்றான், அவன்.

"சவூதியிலையிருந்து எப்ப வந்தனீங்கள்? வீட்டிலை எல்லாரும் சுகந்தானே?" அவளே கேள்விகளுடன் தொடர்ந்தாள்.

சுதாரித்துக் கொண்ட சுந்தரும் தன் பங்குக்குக் குசலம் விசாரித்தான்.

தனது தந்தை இரண்டு வருடங்களுக்கு முன்பு காலமானதைத் தொடர்ந்து தான் தாயாருடன் கோப்பாயில் மூத்த சகோதரியின் குடும்பத்துடன் வசித்துக்



கொண்டிருப்பதாகச் சொன்னாள் அவள்.

"கலா, நான் உம்மோடை ஆறுதலாச் சில விஷயங்கள் கதைக்க வேணும். உங்கட வீட்டுக்கு வரட்டே?"

இதற்குள் கலா வந்திருந்த 'மினிபஸ்' புறப்படத் தயாராகியிருந்தது. சிங்கள இராணுவத்தினரை எதிர்பார்த்து தாம் கண்ணிவெடிகளைப் புதைத்திருக்கும் வழியில் பொதுமக்களின் போக்குவரத்தைத்

www.tamilarangam.net

தவிர்ப்பதற்காகவே எல்லோரும் தீவிரவாதிகளால் மறிக்கப்பட்டிருந்தனர். வாகனங்களை வேறு வழிகளில் செலுத்தும்படி சாரதிகள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

"வர்ற வெள்ளிக்கிழமை நான் எங்கட பிள்ளையார் கோயிலுக்கு வருவன். அங்கை வாங்கோவன்!" அவசரத்துடன் சொல்லிவிட்டு விடைபெற்றுக் கொண்டாள் கலா.

தனது பிறந்தநாள் ஒவ்வொன்றுக்கும் தன் இஷ்டதெய்வமான இந்தப் பிள்ளையாரிடம் வருவது அவளுக்கு வழக்கமாயிருந்தது. தனக்கு இது ஏற்கனவே தெரிந்திருந்தாலும், சமயத்தில் ஞாபகத்திற்கு வந்திருந்தால் அவளுக்காக ஏதாவது பிறந்தநாள்ப் பரிசு கொடுத்திருக்கலாமே என்று நினைத்துக் கொண்டான் சுந்தர்.

கடந்துபோன சம்பவங்களிடையே சுழன்றுகொண்டிருந்த சுந்தரின் எண்ணங்கள் கோவில் மண்டபத்திலிருந்து வெளியேறி, அவளை நோக்கி வந்துகொண்டிருந்த கலாவைக் கண்டதும் நிகழ்காலத்துக்குத் திரும்பின.

"தனியவோ வந்தனீர்?" கேள்வியுடன் வரவேற்றான் சுந்தர்.

"இல்லையில்லை, அம்மாவுந்தான் வந்தவ. அவ மாமி வீட்டை போயிற்றா"

கலா புன்முறுவலுடன் அவனைப் பார்த்தபடியே சற்றுத் தள்ளி அமர்ந்து கொண்டாள். மெலிந்திருந்தாள். கண்களில் அன்றிருந்த ஒளிர்வை அடையாளங் கண்டுகொள்ள முடிந்தாலும், காணாமல் போயிருந்த அவளது கூந்தலின் அடர்த்தியும், பளபளப்பு மறைந்துவிட்ட கன்னங்களும் அவளுடைய நிறத்துக்கு முதிர்ச்சியான தோற்றத்தைக் கொடுத்திருந்தன.

"என்னைத்தான் சந்திக்க வாறீரெண்டு அம்மாவுக்குத் தெரியுமே?"

அவளிடம் பேசவேண்டுமென்று திட்டமிட்டிருந்தவை எல்லாம் இப்போ மறந்துபோயிருக்கவே தயக்கத்துடன் கேட்டான்.

ஆமென்று தலையாட்டியே பதிலளித்த கலாவின் கால்களில் ஒன்று கீழே கோலமிட்டுக் கொண்டிருந்தது.

"சவூதிக்குத் திரும்பி எப்ப வேலைக்குப் போறீங்கள்?"

"என்ரை 'எக்ரிமெண்ட்' முடிஞ்சபடியாத்தான் திரும்பி வந்தனான். இனியும் எங்கையாவது வெளியிலை போகத்தான் திட்டம். இன்னும் ஒண்டும் சரிவரேல்லை"

"கலியாணப் பேச்சு மும்முரமாக நடக்குதுபோலை"

இப்படியொரு கேள்விக்கான சந்தர்ப்பம் தங்களுக்குள் உருவாகியிருப்பதற்காக இருவருமே மனதுக்குள் குமைந்ததை இருவரது முகபாவங்களிலும் கவனிக்கக் கூடியதாயிருந்தது. குற்றவுணர்வால் சுந்தரோ அவளை நோக்கத் தைரியமின்றி வேறெங்கோ வெறித்தபடி மௌனஞ் சாதித்தான்.

"சீதனப் பிரச்சனைகளாலை இழுபடுது எண்டு நினைக்கிறன்"

அவள் தன்னை ஏளனஞ் செய்கிறாளோ என்று தோன்றியது சுந்தருக்கு. அவள்முன் தான் குறுகிப்போய் நிற்கவேண்டி வந்ததற்குக் காரணமாயிருப்பவை தனது தவறுகளேயென்பது அவனுக்குஏற்கனவே நன்றாகவே உறைத்தது.

"கலா! நான் என்னத்துக்கு வரச் சொன்னனானெண்டால் ...... உம்மடை அப்பா முந்திச் சொன்ன தொகையை ஒழுங்குசெய்ய ஏலுமெண்டால் நான் வீட்டிலை எங்கடை கலியாணத்தைப் பற்றிக் கதைக்கலாம் எண்டு யோசிக்கிறன்"

"இப்ப ஏன் விலையை நல்லாக் குறைச்சுப் போட்டியள்"

"இப்பிடி எடுத்தெறிஞ்சு கதைக்கவேண்டாம் கலா. உம்மைக் கட்டிறதுக்கு விருப்பமில்லாமலே 'லவ்'

www.tamilarangam.net

பண்ணிக் கொண்டு அலைஞ்சனான்"

"ஒரு காலத்திலை நானும் நம்பினனான்தான் ...... ஆனால், அதெல்லாம் வெறும் மாயை எண்டு விளங்கிக் கனகாலமாயிட்டுது. மூண்டு வருசத்துக்கு முந்தி உங்கடை வீட்டார் உங்களுக்குக் கலியாணம்பேசி எங்கடை வீட்டை வரேக்கை ரொக்கமா அஞ்சு லச்சம், வீடு, நகையெண்டு எவ்வளவு கறாராச் சீதணம் பேசினவையெண்டு நான் இன்னும் மறக்கேல்லை. எங்களாலை அவ்வளவு செய்ய ஏலாதெண்ட படியாத்தான் பேச்சுக் குழம்பினது. ஆனால், அப்பவெல்லாம் நீங்கள் சுண்டுவிரலைக்கூட ஆட்டேல்லை"

"அப்பிடியில்லை கலா! அம்மா ஐயாவுக்கெதிரா நான் எப்பிடிக் கதைக்க ஏலும்?"

தான் சொன்னது சாக்குப் போக்கென்று புரிந்துகொள்வது அவனுக்கொன்றும் கஷ்டமான காரியமில்லையென்று அவனுக்குத் தெரிந்தேயிருந்தது.

"உங்கடை கையாலாகாத் தனத்துக்கு மற்றவையைக் காரணங் காட்டித் தப்பப் பாக்க வேண்டாம், சுந்தர். எங்கடை வீட்டுக்குக் கலியாணம் பேசி உங்கடை ஆக்கள் வந்ததோடை நீங்களும் சவூதியிலையிருந்து எனக்கு எழுதிறதை நிப்பாட்டினனீங்கள். அப்பவே உங்கடை சுயரூபம் எனக்குத் தெரிஞ்சிட்டுது"

சீதனப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும்போது தனக்குக் கலாவுடன் கடிதத் தொடர்பு இருக்குமாயின் கறாராகப் பேசி முடிப்பதற்கு இடைஞ்சலாக இருக்கக்கூடுமென்ற அப்பாவின் கருத்துக்கு, அபூர்வமாகச் செவிமடுத்து அவளுடைய கடிதங்களுக்குப் பதிலெழுதாமல் விட்டதைத்தான் அவள் குறிப்பிடுகிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது.

## தந்தையின் கவலை!

நோர்வேயில் இருந்து தந்தைக்கு ஒருவர் கடிதம் எழுதினார், "இங்கு இருண்ட வாழ்க்கைதான்" என்று. தந்தை துடித்துப் பதைத்துப் பதில்க் கடிதம் எழுதினார் "அப்படி என்ன கஷ்டம்? அதுதான் செல்வந்த நாடாயிற்றே?" என்று.

மகன் பதில்க் கடிதம் எழுதினார், "வின்ரருக்கு 2,3 மணிநேரம் மட்டும்தான் மங்கலான வெளிச்சம் இருக்கும். அதுவும் வேலைத்தலத்தில் இருக்கும்போதே வந்துபோய்விடும். மிகுதி இருட்டோடுதான் வாழ்க்கை போகிறது."

– நகையார் –

அவன் சவூதிக்குத் திரும்பிச் செல்லவியலாது என்பது ஊரில் அனேகமாக எல்லோருக்கும் தெரிந்துவிட்டிருக்கவே, இஷ்டப்படி சீதணம் வாங்கமுடியாத நிலைமையும், ஜேர்மனிக்குச் செல்வதற்காக ஏஜென்சிக்குக் கொடுக்க வேண்டிய பெருந்தொகைக்கான தட்டுப்பாடுமே தான் இப்போது அவளைத் திருமணஞ் செய்துகொள்ளத் தயாராகி இருப்பதற்கான காரணங்கள் என்பதை எப்படி அவன் வெளிப்படையாகச் சொல்வான்?

தனக்கு அவள் இப்படி முகத்திலறைந்தாற் போல் உண்மைகளைச் சுட்டிக்காட்டி வாயடைத்துப் போகச் செய்யக் கூடுமென்று அவன் கிஞ்சித்தும் எதிர்பார்த்திருக்கவில்லை.

"உம்மை ஏமாத்திப் போட்டன் எண்டு நீர் நாளைக்கு நினைக்கக்கூடாது எண்ட எண்ணத்திலைதான் நான்......."

கிழிக்கப்பட்டுவிட்ட தன் பொய்முகத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவன் ஏதோ சொல்ல முற்படவே சீற்றத்துடன்

www.tamilarangam.net

இடைமறித்தாள் கலா.

"நான் ஏதோ உங்களிட்டை யாசிக்கவந்த மாதிரியெல்லோ இருக்கு உங்கட கதை. நீங்கள் கதைக்கவந்த விஷயம் இதுதான் எண்டு யூகிக்க ஏலுமாயிருந்திருந்தால் நான் உங்கடை முகத்திலையே முழிச்சிருக்க மாட்டன்"


நிர்த்தாட்சண்யமாக அவனது முகத்தை நோக்கிச் சொல்லிவிட்டுச் சீற்றத்துடன் போய்க் கொண்டிருந்தாள் அவள். அவளது கண்களை நோக்கத் திராணியற்றுத் தலைகுனிந்தபடி அமர்ந்திருந்த அவனது கண்கள் கலங்கியிருந்தன.

(யாவும் கற்பனை)

# நான் சந்தோஷமாக இருந்த அன்று

## சோலைக்கிளி

என்னைச் சுமந்தபடி போயின
வண்ணத்துப் பூச்சிகள்.
கொண்டுபோய்;
ஒரு மரத்தின் பழுத்த இலையில் வைத்தன
இருக்க.



தூங்குக என்று
பூக்களைக் கொண்டுவந்து விசிறியால் வீசின
காற்று மணக்க மணக்க
பூச்சிகள்.
உண்ணத் தேன் கொடுத்தன வாய்க்குள்.
நான் அங்கிருந்து பாடிய கவிதையை
சிறகிற்குள் பத்திரமாய்
கொண்டு சென்று பூமரத்தின் கன்னிக்குள்
ஊற்றின,
நாளைய மலர்கள் இனிக்க.

கால் ஊன்றியது ஒரு பூச்சி.
ஒவ்வொரு உரோமம் உரோமமாக
மினுக்கி மினுக்கி
காலில்
அடுக்கி வைத்தது இன்னொன்று.
ஒரு பூச்சி
என்னை இழுத்து
முகர்ந்தது.
சந்தோஷமாக இருக்கின்றான்
இவன் "மனிதன்தான்" என்றது.
எல்லாப் பூச்சிகளும் கையடித்து மகிழ்ந்தன.


நான் இருந்த
பழுத்த இலை முனகியது.
ஆனாலும் விழவில்லை.
பாரமே இல்லை, நான் இன்று,
பாரமே இல்லை.
ஒரு பூச்சி சொல்லியது,
உன்னை நான்
சிறுவிரலால் தூக்கிக் காட்டுகிறேன் என்று;
தூக்கியபடி.

ஆம், வண்ணத்துப் பூச்சிகள் இராட்சதப் பறவைகள்.
பலம் மிக்கவை.

17.10.92

www.tamilarangam.net





# உலகைத் தன்வசப்படுத்திய நகைச்சுவைக் கலைஞன்

அந்தக் குள்ள உருவம் திரையில் தோன்றியதுமே, சிறுவர்களுக்கு மட்டுமன்றிப் பெரியவர்களுக்கும் சிரிப்பு அடக்க முடியாத அளவில் வருகிறது. அவனது துக்கங்களில் கோமாளித்தனங்களில் பார்வையாளர்கள் தங்களை மறந்து சிரிக்கிறார்கள். மொழி புரியாவிட்டால் ரசிக்க முடியாதே என்ற கவலை இல்லாமல் உலகின் பல்வேறு மூலைகளிலும் ரசிக்கப்படும் அந்தக் கலைஞன் சார்லி சாப்ளின் (1889 – 1977). அவனது நகைச்சுவை வெறும் கோமாளித் தனமானதா? அவனது நகைச்சுவைகளுக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் சோகம் என்ன, செய்தி என்ன? இந்தக் கேள்விகளுக்கு றிச்சட் அட்டன்பரோவின் புதிய திரைப்படம் பதில் சொல்லக்கூடும்.

சிலரது வரலாறு மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது. சிலரது வரலாறு முன்னுதாரணமாகக் கூறப்பட முடியாவிட்டாலும், அவர்களது வரலாறு பலரது கவனத்தைப் பெறுவது தவிர்க்க இயலாதவாறு அவர்களது பிரபலம் விளங்குகிறது. இந்த வகையில் சார்ளி சாப்ளினின் வரலாறு பலரால் முன்னுதாரணமாகக் கொள்ளப் படலாமா என்பது (சில விடயங்களில்) சர்ச்சைக்குரியதாக இருந்தாலும், அவரது வாழ்வு பற்றி அறிய யாரும் ஆவலுடையோராய் இருப்பர் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.



www.tamilarangam.net



றிச்சட் அட்டன்பரோவைத் தமிழர்கள் பலரும் அறிந்தது, காந்தி படத்தின் மூலம்தான். அவரது அர்ப்பணிப்பு நிறைந்த திரைப்படத் தயாரிப்புகள் சில, புகழ்பெற்றோரின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு அவற்றை மீளளிக்கும் வகையிலானவை. காந்தி, க்றை ஃப்ரீடம் (நிறவெறிக்கெதிராகப் போராடிய தென்னாபிரிக்கப் போராளி ஸ்ரீவ் பீகோவின் வாழ்லைப் பின்னணியாகக் கொண்டது) மற்றும் சேர்ச்சிலின் வாழ்வை அடிப்படையாகக் கொண்ட படம் என்பன இவ்வகையில் குறிப்பிடத் தக்கவை.

ஒருவரது வரலாற்றை மீள உருவாக்கி வழங்குவது இலகுவான ஒன்றல்ல. ஆயினும் பல வருடங்கள் தனது நேரத்தை அர்ப்பணித்து ஒரு கலைஞன் அவ்வாறான படைப்பை உருவாக்க முடியும் என்பதற்கு 'காந்தி' ஒரு நல்ல உதாரணம். அவ்வாறே



சாப்ளினின் படத்தையும் அட்டன்பரோ உருவாக்கியுள்ளார். திரைப்படத்தில் சாப்ளின் பாத்திரம் ஏற்றுள்ள றொபேட் டௌணியைக் கண்டுபிடிக்க மாத்திரம் மூன்று வருடங்களைச் செலவிட்டுள்ளார் அவர். டௌணியின் பாத்திரப் பொருத்தத்தைப் பற்றி சாப்ளினின் மகளான ஜெரால்டின் மிகவும் வியந்து பாராட்டியுள்ளார். சாப்ளினின் தாய் ஹன்னாவாக ஜெரால்டினே நடிக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது. (இவர், நோர்வேஜியப் படம் ஒன்று உட்பட, எழுபதுக்கு மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்) சாப்ளினின் உடல்வாகு, அவரது விரைவு போன்றவற்றையும் உருவ ஒற்றுமையையும் கொண்ட நடிகரைக் கண்டுபிடிக்க அட்டன்பரோ செலவிட்ட நாட்கள் பயனுள்ளவையே என ஜெரால்டின் கூறியுள்ளார்.



சாப்ளின் பற்றிய இந்தத் திரைப்படம் ஒரு நூலை அடிப்படையாகக் கொண்டே

www.tamilarangam.net

சாப்ளின் பலரும் கருதுவதுபோல வெறும் திரைப்படக் கோமாளியல்லர். அவரது திரைப்படங்கள் அதிகார வர்க்கத்தை நடுங்க வைத்தன. ஹிட்லருக்கும், சாப்ளினுக்கும் இருந்த உருவ ஒற்றுமையைப் பயன்படுத்தி சாப்ளின் தயாரித்த 'த டிக்டேட்டர்' திரைப்படம் ஹிட்லரின் உயர்ந்தபட்ச வெறுப்பைச் சம்பாதித்தது. இதுவே ஹிட்லரின் பிரசாரப் பீரங்கி கோயபல்ஸ் சாப்ளின் ஒரு யூதர் எனக் குற்றம் சாட்டக் காரணமானது.

மனிதாபிமானத்திற்காகவும், உலகில் அமைதிக்காகவும், சுரண்டலற்ற சமுதாயத்திற்காகவும் தனது திரைப்படங்கள் மூலம் குரலெழுப்பிய அந்தக் கலைஞன், அமெரிக்காவால் 'கொம்யூனிஸ்ட்' என முத்திரை குத்தப் பட்டார். ஆனால் இன்றும் அவரது புகழை யாராலும் மறைக்க முடியவில்லை.

உருவாகியுள்ளது. டேவிட் றொபின்ஸன் என்பவர் சாப்ளின் பற்றி எழுதிய நூலை ஆதாரமாகக் கொண்டு நால்வர் திரைச்சுவடியை எழுதியுள்ளனர். கதை எழுத்தாளனாய், நடிகனாய், இசையமைப்பாளனாய், படத்தொகுப்பாளனாய், தயாரிப்பாளனாய் விளங்கிய சாப்ளின் ஒரு படத்தை உருவாக்க மிகுந்த கரிசனை எடுத்துக் கொண்டார். அவருக்குள் இருந்த கவலைகளையும் முற்றாக மறந்து, முழுநேரமாகத் தன்னை ஈடுபடுத்தி, திரைப்படம் சிறப்பாக வரும்வரை கடுமையாக உழைப்பார் என அவரைப்பற்றித் தெரிந்தவர்கள் கூறியுள்ளனர்.

தனது மிக இளமைக் காலத்தில் வறுமையில் வாடிய சாப்ளின் மிகக் குறைந்த வயதிலேயே உலகப் புகழ் பெற்றார். 25வயதில் உலகிலேயே மிகப் புகழ் பெற்றவரானார். 26 வயதில் பெரும் கோடீஸ்வரரானார். 'யுனைரெட் ஆட்டிஸ்ற்' என்ற படநிறுவனத்தையும் இக்காலப் பகுதியிலேயே ஸ்தாபித்தார். அட்டன்பரோவின் திரைப்படம் இந்தக் காலப் பகுதிகளையே பெரும்பாலும் கையாள்கிறது. தனது பதினொராவது வயதில் சாப்ளினின் திரைப்படத்தைப் பார்த்து, ஒரே நேரத்தில் பார்வையாளரைச்





www.tamilarangam.net

சிரிக்கவும் அழவும் வைக்கும் சாப்ளினின் ஆற்றலைக் கண்டு வியந்தார் அட்டன்பரோ. அன்றிலிருந்து திரைப்படத் துறையில் ஈடுபாடு கொண்ட அட்டன்பரோ தனது திரைப்படவாழ்வைத் தொடங்கியபோது சாப்ளினைச் சந்தித்தபோதும், அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பங்கள் பெரிதும் ஏற்பட்டதில்லை. எனினும் அவர் நீண்ட நாட்களாகக் கொண்டிருந்த அவா இன்று மூன்றுகோடி டொலர் செலவில் திரைப்படமாக உருவாகியுள்ளது.

அட்டன்பரோவின் திரைப்படத்தில், ஒஸ்கார் விருது பெற்ற நடிகர் அந்தனி ஹொப்கின்சும் நடிக்கிறார். உலகப் புகழ்பெற்ற ஒளிப்பதிவாளரான ஸ்வேன் நிக்விஸ்ற் ஒளிப்பதிவைக் கையாள்கிறார். பல புகழ்பெற்ற திரைப்படங்களைத் தந்த றிச்சட் அட்டன்பரோவின் கைவண்ணத்தில் இதுவும் ஒரு புகழ்பெற்ற திரைப்படமாகும் என நம்பலாம்.

## தடுப்பு!

நோர்வேயில் வாழும் பல வெளிநாட்டவர் அடிக்கடி தமது தாய்நாட்டிற்குச் சென்று வருகின்றனர். இவ்வாறு அவர்கள் சென்று வருகையில் தமது குழந்தைகளையும் தம்முடன் அழைத்துச் செல்கின்றனர். இவ்வாறு இவர்கள் பயணம் செய்யும்போது தமது சிறு குழந்தைகளைத் தடுப்பூசிகள் செலுத்தாமல் அழைத்துச் செல்வதால் குழந்தைகள் அந்த நாடுகளுக்குச் சென்று பல்வேறுபட்ட நோய்த் தொற்றல்களுக்கு ஆளாகின்றனர்.

நாட்டைவிட்டு வெளியேறுமுன் தேவையான தடுப்பூசிகளைச் செலுத்துவதால் குழந்தைகளை நோய்த் தொற்றலில் இருந்து காப்பாற்றலாம்.

- மோகன் -

*சாப்ளின் பல தடவைகள் நோர்வேக்கு வருகை தந்துள்ளார். இந்தப் படம் அவாது 1964 ஒஸ்லோ விஜயத்தில் எடுக்கப் பட்டது.*



www.tamilarangam.net

துருவச்சி

# எப்பொருள் யார்வாய்க் கேட்பினும்

கற்பில்லாததுதானா தமிழ்ச் சமூகம்?

புரியாத புதிர் 12

நான் விசித்திரக் கவிராயரை இழுத்துக் கொண்டு தமிழர்களால் செல்லமாக 'தூஷணப் பா(ர்)க்' என்று அழைக்கப்படும் விஜிலண்ட் பா(ர்)க்கிற்கு ஒருநடை போய் வரலாம் என்று புறப்பட்டேன்.

நோர்வேயின் அற்புதக் கலைவண்ணங்களுக்கு விஜிலண்ட் பூங்கா ஒரு எடுத்துக்காட்டு. ஒவ்வொரு கலைவேலைப்பாடுகளையும் நின்று நின்று ரசித்துக் கொண்டே வந்த கவிராயரை நிறுத்திக் கேட்டேன்.

"எப்பிடி அண்ணை தூஷணப் பார்க்?"

"தூஷணப் பார்க்கா? என்ன தம்பி நாங்கள் தமிழர்கள், கலைகளைக்கூடக் கொச்சைப்படுத்தி தூசணையாகக் கருதுகிற ஆக்கள் போல" என்றார்.

நான் ஒன்றும் சொல்லவில்லை. சற்றுதூரம் நாம் நடந்து போனோம். திடீரெனக் கவிராயர் கேட்டார், "தம்பி, கற்பு எண்டா என்ன?"


எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒருவாறாகச் சமாளித்துக் கொண்டு, "அதுவந்து... ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒருத்தர ஒருத்தர் மட்டும்தான் தொடலாம், ......அதுதான் கற்பு" என்றேன்.

"அவ்வளவுதானா கற்பு என்றா?"

பூங்கா காட்டக் கூட்டிக் கொண்டு வந்தால் இது என்ன வம்பாப் போச்சு என்று யோசித்தேன். ஆனாலும் சமாளித்துக் கொண்டு

"ஓம், ஒரு ஆண் ஒரு பெண்ணைத்தான் மணமுடிக்கலாம். ஒருவனுக்கு ஒருத்தி என்பதுதான் வாழ்க்கை. மதங்கள் குறிப்பாக இந்துமதமும் தத்துவங்களும் இதைத்தான் சொல்லுது.....

இந்து மதம் ஒருவனுக்கு ஒருத்தி என்ற புனிதமான தத்துவத்தைச் சொல்லுது. அதிலையும் ஒரு ஆணோ பெண்ணோ இன்னொருவரை (மனைவியையோ கணவனையோ தவிர்ந்த) மனதால்கூட நினைக்கக்



www.tamilarangam.net

கூடாது. அப்படி மனதால் நினைத்தாலே கற்பை இழந்தவர்களாக, புனிதமற்றவர்களாக, பாவம் செய்தவர்களாகச் சொல்லுது. அதாவது கற்பு என்பது உடலை மட்டும் வைத்துச் சொல்வதில்லை, முக்கியமாக மனதை மட்டும் வைத்துச் சொல்வது......" என்று ஒரே மூச்சில் சொன்னேன். அவர் கேள்விக்குத் தக்க பதிலடி கொடுத்துவிட்டதாக பெருமிதத்தோடு பார்த்தேன்.

கவிராயரோ திருப்தி அற்றவராகக் காணப்பட்டார், "சரி அதிலைதான் தம்பி ஒரு விசயம் புரியேல்லை."

"ஐயோ திரும்பவுமா?" என்றேன்.

"ஓம் தம்பி, இப்பிடி இந்து மதமும் தத்துவமும் ஒருவனோ ஒருத்தியோ மனசாலை ஒருவரை மட்டும்தான் நினைக்கலாம், அல்லாட்டிப் போனால் கற்பு இழந்தவர்கள், பாவம் செய்பவர்கள் எண்டு சொல்லுது. இந்தத் தத்துவத்தைக் கோயில்களிலையும் கேக்கிறம், பள்ளிக்கூடத்திலையும் படிக்கிறம். அப்பாவும் அம்மாவும் அடிப்பிச்சு எங்களைப் படிக்கச் சொல்லிச்சினம். பெரிய பெரிய கூட்டங்களில அறிஞர்களும் மக்களுக்குச் சொல்லிகினம். இதைப்பத்தி எங்கட சனம் பெரிய அளவில கதைக்குது, இப்பிடித்தான் வாழ வேண்டும் எண்டு......"

"ஓம் ஓம் இப்ப இதிலை என்ன விளங்கேல்லை?" என்று கேட்டேன்.

"இப்பிடிக் காலம்காலமா கத்திறம். ஆனால் சமுகத்திலை என்ன நடக்குது? ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஏதோ ஒரு பருவத்திலை இன்னொருவரை மனசார விரும்புகினம். அப்பிடி அவர்கள் விரும்புகிறவையளோட சேர்ந்து வாழ்ந்தால்தானே கற்புடையவையா புனிதமானவர்களா இருக்க முடியும்? ஆனால் எங்கட ஊரிலை எங்கட சமுகத்திலை என்ன நடக்குது? இப்பிடி ஆணோ பெண்ணோ ஒருத்தரை விரும்பின உடனை, அதையறிஞ்ச தாய்தகப்பன், பணம் அந்தஸ்து சாதி சமயம் எண்டு சொல்லி அதுகளைப் பிரிச்சு இன்னொருவருக்குப் பொய் சொல்லி ஏமாத்தி, (கற்பு இருப்பவர்கள் எண்டு சொல்லிக்) கட்டி வைக்கினம். இப்பிடி ஒருத்தரை மனசார நினைச்சுப்போட்டு இன்னொருத்தருக்கு வலுவில்லங்கமாகக் கட்டி வைச்சால், மேல சமயமோ தத்துவமோ சொல்வதுபோல அவர்கள் கற்பு இல்லாத ஆட்களாகி விடுவினம். பிறகு



கவிராயரின் புரியாத புதிர்கள்

தாங்கள் விரும்பிக் காதலிச்ச ஆக்களை மனசிலை நினைச்சுக் கொண்டு இன்னொரு ஆளோட நிர்ப்பந்தத்திற்காக வாழுகினம். இதனால துப்பரவுக்குக் கற்புக் கெட்டவர்களாக மாறிப் போகினம். அப்பிடியெண்டால் விபச்சாரமெல்லா?

இப்பிடித் தாய் தகப்பனோ சமுகமோ, சொல்றது ஒண்டு செய்யிறது ஒண்டாகிறது. இப்பிடி நாளுக்கு நாள்

www.tamilarangam.net

நியாயமான அளவிலை எங்கட தமிழ்ச் சமூகத்திலை பல லட்சம்பேர் கற்பில்லாதவர்களா இருக்கினம். எனவே எங்கட சமூகம் கற்பில்லாத சமூகமா தம்பி?" என்று கேட்டார்.

"ஐயோ அண்ணை கற்பில்லாத சமூகத்திலையா நாங்கள் வாழுறம்?" என்று என்னை அறியாமலேயே கூச்சலிட்டேன். யோசித்துப் பார்த்தால் சற்று அருவருப்பாகக்கூட இருந்தது.

> விசித்திர கவிராயருக்கு ஓரளவு சில விசயங்கள் தெரியும். மனிதனை மனிதன் கொல்வது சரியென அவர் ஒப்புக் கொள்வதில்லை.

## சுடலைக் காட்சி.....

கூக்குரல் சத்தம் இப்போது
குறைந்துவிட்டது....
சுடலைகளுக்குள்.
புலையனின் வீடு எப்போதும்
பூட்டியே கிடக்கின்றது...

மனித உணர்வுகள்
செத்துப் போக...
ஊரெல்லாம் இப்போது
சுடலை வேஷம் போட்டுக் கொண்டன.
பதுங்குகுழிகள், பாதையோரங்கள்
சாக்கடைகள் சந்துபொந்துகள் எல்லாம்
சவச் சந்தைகளாகி
ஆண்டுகள் பல....

மலமள்ளும் யூ.சீ.தொழிலாளிபோல
மக்கள் எல்லோரும்
தம் மூக்கை தூமுயர்த்திக் கொண்டார்கள்.
நேர்மை நிகழ்வுகள்
நேசத்தை
அடகுவைத்துவிட்டு
வட்டிக்கடைச் சட்டங்கள்
போல.....
வெறும் வாய்ச்சடங்கால்
அவஸ்தைப்படும்
அர்த்தங்கள் நீதமற்ற
நிர்வாணங்களாய்.....
பூதலத்தின்
புழுக்களுக்குத்தான்
இப்போது
கொண்டாட்டம் -
உப்புச் சுவைக்கும்
உருசியுடைய
மனித இறைச்சி
கிடைத்துவிட்ட
மகிழ்ச்சி -

உள்ளடுவதற்கும்
ஊடுருவுவதற்கும்.....
மனித மூளைக்குள்
புழு.
மனித இதயத்தில்
புழு.
இனியென்ன?
ஆனால்
அவன் இன்னும்
கதிரையில்
அமர்ந்திருக்கிறான்
வட்டமேசை
மாநாடு நடாத்துவதற்கு.

இளைய அப்துல்லாஹ்,
இலங்கை

www.tamilarangam.net




## சிறைக் கதவுகள் திறக்குமா?

பெரு நாட்டின் 'ஒளிரும் பாதை' கெரில்லா அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரான அபிமா(ய்)ல் குஸ்மான் தப்பிச் செல்ல முயற்சிக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், அவரை மேலும் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றம் செய்ய உள்ளதாக பெரு அரசு அறிவித்துள்ளது.



குஸ்மான் கைதான நான்கு மாதங்களுக்குள் 44 றாத்தல் எடையை இழந்துள்ளதாகவும், தற்போது அவர் 2மீற்றர் X 4மீற்றர் அளவுள்ள நிலக்கீழ் அறையொன்றில் அடைக்கப்பட உள்ளார் எனவும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஏற்கனவே அவர் அடைத்து வைக்கப்பட்டிருந்த தீவுக்கு அருகில் மீன்பிடித்த பலர், குஸ்மானை மீட்க வந்தவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில், கடற் படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டிருந்தனர்.

குஸ்மானின் விடுதலைக்காக சர்வதேச ரீதியில் குரலெழுப்பி வருகிறது. குஸ்மானின் விடுதலைக்கான (சர்வதேச) அவசர நடவடிக்கைக் குழு. லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இந்தக் குழுவின் நிதித் தேவைகளை உணர்ந்து, இயன்ற உதவிகளைச் செய்யுமாறு குழு செய்தி மடல்மூலம் கேட்டுள்ளது. பல்வேறு நாடுகளிலும் உள்ள மனிதாபிமானிகளை ஒன்றிணைத்து, குஸ்மானின் விடுதலை நோக்கிய நடவடிக்கைகளை இந்தக் குழு மேற்கொண்டு வருகிறது.

இக்குழு பற்றிய மேலதிக தகவல்களுக்கும், குஸ்மானின் விடுதலைக்காக நீங்கள் தெரிவிக்கும் ஆதரவை வெளிப்படுத்தவும், குழுவுக்கு உங்களாலான நிதி உதவிகளைச் செய்யவும் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

International Emergency Committee to Defend the Life of Dr.Abimail Guzman, BCM -IEC, 27 Old Gloucester st, London WC1N 3XX, England.

தொலைபேசி, ஃபாக்ஸ்: 44.71.482 0583

**மதுரன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்